சக்தி

ஜன-மார்ச்

1999

வாசகர்களிடமிருந்து ஆக்கங்களையும்
விமர்சனங்களையும் எதிர்பார்ப்புக்கு உட்படுத்திக்
காத்திருக்கிறது
சக்தி

தொடர்புகட்கு

SAKTHI
BOKS 99 OPPSAL
0619 OSLO 6
NORWAY

(Post Konto - 05330973872)

அட்டை ஓவியம்
ரி.சௌந்தர்

நிதர்சினி கொலை-
உலுக்கிய செய்தி - உழலும் சக்தி
(பக்.03) றயாகரன்
பேதமை
(பக்.10) நளாயினி தாமரைச் செல்வன்
அந்தப் பசசைக் காலுறைகள்
(பக்.11) தயாநிதி
நல்லதோர் வீணை செய்து...
(பக்.19) அழகுகுணசீலன்
பெண்ணிலைவாதம் சில கேள்விகள்
(பக்.23)
நூல் அறிமுகம்
(பக்.25)றஞ்சி
அழுகின்றேன்
(பக்.29)நளாயினி தாமரைச்செல்வன்
சுவிஸ் நாட்டு முதல் பெண் தலைவி
(பக்.30) நந்தினி
இன்றிரவு
(பக்.32) தயாநிதி
உரையாடல்
(பக்.33)றஞ்சி,தயாநிதி
உன் இருப்போ உணமை
(பக்.37) பாமதி
மார்ச் 8
(பக்.38)

நிதர்சினி கொலை



உலுக்கிய செய்தி உழலும் சுகதி

- றயாகரன்

பாரீசையும், புலம்பெயர் சமூகத்தையும் அதிர்ச்சிக்கும், ஆத்திரத்துக்கும் உள்ளாக்கிய 11 வயது சிறுமி நிதர்ஷினி மீதான பாலியல் வக்கிரம், படுகொலை, கப்பம், கொள்ளையின் பின் தன்னெழுச்சியாக ஆயிரக் கணக்கில் தமிழ் மக்கள் (கணிசமான பிரஞ்சு மக்களும்) திரண்டு தமது அனுதாபத்தை, அபிராயங்களை வெளிப்படுத்தினர்.

மனிதகுலம் வெட்கித் தலைகுனியும் வண்ணம் பாடசாலையால் வந்து பசி தீர்க்க ஆவலாக உண்ணப் புறப்பட்ட போது, காமப் பசியால் அலைந்த இரண்டு நாய்களின் (பேட்சன், தியாகரூபன்) உணவாகியது மட்டுமின்றி, அக் குழந்தையை சுவைத்துண்டு வெறிதீர்த்த பின் மின்சார வயரால் கழுத்தை இறுக்கி -தமது வழமையான பாணியில்- கொலைக் கலாச்சாரத்தின் அனுபவத்துடன் தடயத்தை அழிக்கும் கைவந்த கலையாக முடித்து வைத்தனர்.

தமிழ்ச் சமூக ஒழுக்க விழுமியங்களை பெண் குழந்தைகள் மீது மிக கண்டிப்பான வகையில் கடைபிடிக்கும் ஆண்கள் சாந்த ஆணாதிக்கமும், அந்த ஆண் வர்க்கமும் தான் இப் படுகொலைக்கு முழுப்பொறுப்பாகும். குற்றவாளிகள் மிக திட்டமிட்ட வகையில் இயக்க 'போராட்ட' அனுபவத்துடன் இந்தக் கோரத்தை நடத்தி தப்பிய பின், தற்செயலாக பிடிபட்ட நிலையில், அதன் பாதுகாப்பில் எல்லோரும் குற்றவாளி மீது காறி உமிழ்ந்தார்கள். ஆனால் குற்றவாளி தானாக சமூகத்தில் உருவாவதில்லை. குற்றாவாளியை உருவாக்குபவர்களே பின்னால் குற்றவாளி மீது கண்டனம் செய்வதன் மூலம் தம்மைப் பாதுகாத்து ஒளித்துக் கொள்கின்றனர்.

பாலியல் வன்முறை எப்படி அவன் முன் இரக்கமின்றி தோன்றுகின்றது? இந்த பாலியல் வக்கிரத்துடன் கொலை வெறி எப்படி அரங்கேறுகின்றது? உழைக்க மறுத்து கொள்ளையடித்து சொகுசாக எப்படி வாழமுடிகின்றது? என்பதை கொஞ்சம் திரும்பிப் பார்ப்போம். இந்தக் கொலை நடந்த அதே வாரம் வெளியாகிய பிரெஞ்சு சஞ்சிகையான QUESTIONS DE FEMMES (பெண்கள் பற்றிய கேள்விகள்)

பத்திரிகையில் பொருத்தமான தலைப்பில் MARCHE DU SEXE - LES FEMMES AUSSI (பாலியல் சந்தை - பெண்ணும் கூட) கட்டுரை ஒன்று வெளியாகியிருந்தது. பாலியல் என்பது மனிதர்களில் இயல்பானது. இந்த பாலியல் தேவையை பூர்த்தி செய்யக் கூடிய வகையில் சமூகம் இருக்காத எல்லா நிலையிலும் ஆண் - பெண்ணுக்கு இடையில் முரண்பாடுகள், வன்முறைகள் இயல்பாகின்றன. இந்த இடைவெளியில் கட்டியமைக்கப்பட்ட ஒழுக்கம் மனித வளர்ச்சிக்கு எதிரானதாக உள்ள போது தனிமனித ஒழுக்க மீறல்கள் சமூகம் மீதான வன்முறையாக வெளிப்படுகின்றது.

இந்த சமூகத்தின் மனித வளர்ச்சியின் இயல்பான பாலியல் தேவை மறுதலிக்கப்பட்டு, இது இடையூறாக மனித வளர்ச்சிக்கு மாறி நலமடித்த மனிதர்களை ஆண் - பெண் வேறுபாடின்றி உலகில் விதைக்கப்பட்டு வெம்பிப் போனவைகளை சமூகத்தின் ஜனநாயக எதிரியாக காட்டிய பின் அறுவடைகளை ஆணாதிக்க முதலாளித்துவ வர்க்கம் சூறையாடுகின்றது. இந்த வகையில் நலமடித்த ஆண் - பெண் சமூகத்தின் முன் பெண் செக்ஸ் பதுமையாக எல்லாத் துறையிலும் மாற்றப்பட்டு விட்டாள். திரைச் சினிமாவில், குழந்தைகள் முன் கொட்டிக் குவிந்துள்ள கம்பியூட்டர் விளையாட்டுகள், கம்பியூட்டரில் ஆண் பெண் உறவை விளையாட்டுப் போல் செய்து ஈடுபட்டு இன்பம் காணுதல், காட்டூன்கள், விளம்பரங்கள், பயன்படுத்தக் கோரும் உடைகள், தொலைக்காட்சி, பொழுது போக்குகள் என திரும்பும் இடமெல்லாம் பெண் மீதான செக்ஸ் கவர்ச்சியே பின்நவீனத்துவ கோட்பாட்டில் உலகமயமாக்கப்பட்டுள்ளது.

இன்று மறுதலையாக பெண்களைக் கவர ஆண்கள் கூட பெண்கள் முன் கவர்ச்சிகரமாக மாற்றப்பட்டுவிட்டனர். செக்ஸ் கிளப்புகள், கபரேக்கள், மசாஜ் நிலையங்கள், துகில் உரியும் நிலையங்கள் ஆண் - பெண் கூட்டாகவும் தனித்தனியாக அவரவர் ரசனைக்கு ஏற்ப இந்த ஜனநாயகம் பாதுகாக்கின்றது. ஆணாதிக்க ஆண் முன் இந்த 'கவர்ச்சிகரமான வியாபார ரசனை மோசமான பண்பியல் பாய்ச்சலை, தனிநபர் ஒழுக்க மீறல்களை அரங்கேற்றுகின்றது. அப்போதுதான் இது சட்டத்தின் முன் மாபெரும் குற்றமாக, ஆணாதிக்க ஒழுக்கத்தின் முன் அத்துமீறலாக வடிவம் பெறுகின்றது. பால்மணம் மாறாத தமிழ்ச் சிறுமியின் மீது தமிழ் ஆணாதிக்க ஒழுங்கு மீறல் மூலம் வன்முறையைக் கையாண்ட தமிழ்க் காமுகன் எப்படி உருவாக்கப்படுகின்றான். இதுவல்லவா எதிர்காலத்தில் சிறுமிகள் மட்டுமல்ல, பெண்கள் மீதான பாலியல் வன்முறையை தடுக்க போராடமுடியும்.

தமிழில், ஒரு பெண் எப்படி இருக்க வேண்டும் என சாதரண உலகம், கடந்தகால இலக்கியத்தின் உவமைகள் உடன் பெண்ணை ஆணின் பதுமையாக காட்டவே செய்கின்றன. பெண் ஆண் போல் ஒரு உயிர் என்பதை ஏற்க மறுத்து ஆணின் நுகர்வுக்கும், போகத்துக்கும், ஆணின் கடமைக்கும் மட்டுமே ஆண்டவனான ஆண்டவன் படைத்தான் என்பதன் மூலம், பெண்கள் கணவன் என்ற ஆணின் முன் செக்ஸ் பண்டமாக மட்டும் இருக்கக் கோரும் ஒழுக்கவியல், மற்றைய ஆண்கள் முன்னும்

நுகர்வுக்குரிய பொருள்தான். இந்த ஆணாதிக்க ஒழுங்கைக் கட்டிக் காக்கும் சடங்கு மந்திரம் எப்படி பெண் மீதான பாலியல் வல்லுறவு செய்கிறது எனப் பார்ப்போம். சமஸ்கிருத மந்திரத்தின் ஒரு பகுதியில் பெண்ணை நோக்கி "நீ இதுவரை இந்திரனுக்கு ஒருநாள் மனைவியாகி, பின் தேவர்கள் அனைவருக்கும் மனைவியாகி பின் எனக்கும் மனைவியாகி இப்பொழுது நான் உன்னை இவனுக்கு மனைவி ஆக்குகிறேன்" என்கின்ற போது பெண் பண்டமாக, ஆணின் வக்கிர செக்ஸ் தேவையை பூர்த்தி செய்யும் உயிரற்ற ஜடம்தான்.

படத்தில் முகம் பார்த்த திருமணங்கள், பெண்ணைப் பார்த்த திருமணங்கள் ஒரு ஆணை பூர்த்தி செய்வதையே நோக்கியுள்ளது. புலம்பெயர் சமூகத்தில் கணிசமான கனடா இளைஞர்கள் தமது மனைவியை, குழந்தையை கனடாவில் விட்டுவிட்டு இந்தியா சென்று தமது உல்லாசத்தை கழிக்கின்றனர். தாம் திருமணம் செய்ய வந்தாக கூறி இளம் பெண்களை சீதனத்துடன் பெற்று, அவர்கள் பணத்தில் ஒரு மாதம் சம்மதத்துடன் பாலியல் வல்லுறவு கொண்டபின் நடுரோட்டில் பிள்ளையுடன் விட்டுச் செல்வது வாடிக்கையாக உள்ளது. கம்பூச்சியாவில் பயங்கர கொலைகாரன் என்று ஏகாதிபத்தியம் கூறிய பொல்போட்டை ஒடுக்கி சமாதானம் காணச் சென்ற அமெரிக்க 'தியாக வீரர்கள்' இளம் பெண்ணை 50000 ரூபாவுக்கு பணம் கொடுத்தே வாங்கமுடிந்தது. யூத மூளை என்பதாலோ என்னவோ பணம் வாங்கி, கொழுத்த விருந்துடன் உல்லாச பயணம் செய்யும் தமிழன் மூளை அல்லவோ மூளை. இங்கு ஒரு பெண் தனது திருமணத்தில் அவள் சம்மதத்துடன் எப்படி பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்படுகின்றாள் என்பதை காட்டுகின்றது. இங்கு ஏமாற்றுவது மட்டும்தான் நிகழ்ச்சியில் வேறுபடுகின்றது. அதைத் தாண்டி எந்த விளக்கமும் தங்கை என்பதாலோ, அக்கா என்பதலோ மாறி விடுவதில்லை. அக்கா, தங்கை என பல வகையில் விளித்தல் கூட தப்பு நடந்து விடும் என்ற ஒழுக்கத்தை பாதுகாக்கத்தான்.

தமிழ்ச் சினிமாவில் கதாநாயகி முதல் அனைத்துப் பெண்களின் தெரிவு, காட்சி, காட்சிப் படிமங்கள், வசனங்கள், பாடல்கள்... என அனைத்தும் பெண் மீதான கவர்ச்சியை வைத்து சினிமாவாக்கி ஆணாதிக்க சமூகம் முன் காட்சிப் படுத்தப்படும் போது, அதனால் உணர்ச்சி வயப்பட்ட ஒரு நபர் சமூகமீறலை செய்து சமூக ஒழுக்கத்தை மறுத்து காமுகனாகி பெண்ணை குதறும் போது, எப்படி அவனை மட்டும் குற்றவாளியாகக் காணமுடியும். இந்த சினிமாவைத் தயாரித்த, அதைப் போற்றும், அதில் கலை அம்சத்தை மெச்சி பாதுகாக்கும் அனைவரும் தான் முதல் குற்றவாளிகள். அதன் பின் இதில் ஈடுபட்டவன் குற்றவாளியாகின்றான். ஆனால் வழக்கில் எதிர்மறையே எப்போதும் உள்ளதுடன் தூண்டியவன் இந்த அமைப்பின் காவலன் ஆகின்றான்.

இன்று வெகு விமரிசையாக நடத்தும் அரங்கேற்றங்கள் பாலியலை தூண்டுவதையே அடிப்படையாக கொண்டுள்ளது. இசை, ஆடுவது எல்லாம் மனிதன் உழைத்துவிட்டு அதன் களைப்பை போக்க, தமது துயரங்களை மறக்க தன்னியல்பில் தமக்குள் உருவானவை என்பதை மறுத்து, நடனங்கள் ஆடிக் காட்டுவதற்காக,

அதை இரசிப்பதற்காக பெண்கள் பல விதத்தில் அலங்கரித்து அரங்கேற்றப் படுகின்றனர். அதாவது மொடலிஸ்ற் எதைச் செய்கின்றாளோ, அதேபோன்று வாழ்க்கையில் எந்த விதத்திலும் நடனத்தை, இசையைப் பயன்படுத்தாத வகையில் அரங்கேறும் அரங்கேற்றங்கள் பெண்ணை ஆணாதிக்க சமூகம் முன் ரசிப்புக்காக, கவர்ச்சிக்காக அரங்கேற்றுவதன் மூலம், அப் பெண் பல ஆண்களின் கனவுக் கன்னியாக, அதே நேரம் நினைவில் பாலியல் வல்லுறவாகி, சந்தர்ப்பம் கிடைத்தால் நேரில் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாகக் கூடிய வகையில் அரங்கேற்றங்கள் செக்ஸ் பதுமைகளை சமூகம் மீது கவர்ச்சியாக்கி விடுகின்றது. அரங்கேற்றம் பழைய நிலப்பிரபுத்துவ கால மன்னர்கள் முன், நிலப்பிரபுக்கள் முன் பெண்ணை ஆடவிட்டு பெண்ணை அவர்களின் வைப்பாட்டியாக மாற்றிய தொடர்ச்சியில் தான் உருவானது. ஆனால் இந்தப் போக்கு முடிவுக்கு வந்தாலும் ஏகாதிபத்தியம் நிலப்பிரபுத்துவம், முதலாளித்துவம் என பழையதை மறுத்து புதியதை கோரும் பின்நவீனத்துவ உலகமயமாதலில் ஆண்களுக்கு விளம்பரமாக, கவர்ச்சி நாயகியாக, அப் பெண் ஆணாதிக்க வாதிகளால் மனதிலும், படத்திலும் பாலியல் வல்லுறவுக்கு உட்பட மட்டுமே அரங்கேற்றம் நீடிக்கின்றது.

இதுபோல்தான் சாமத்தியச் சடங்குகளும் நடக்கின்றன. ஒரு பெண் ஆணின் ரசனைக்கும், மனதில் பாலியல் வல்லுறவுக்கும், பிள்ளை பெற தயாராக பெண் உறுப்புகள் வளர்ச்சி பெற்று விட்டது என்பதை பறைசாற்றும் வகையில் மட்டும் சடங்குகள் என்ற பெயரால் நடத்தப்படும் கேவலங்கள், ஆணாதிக்க சமூகம் முன் அப் பெண் கூர்மையான பார்வைக்குள்ளாக்கப் படுகின்றாள். பொறுப்பற்ற ஆணாதிக்க பெற்றோர்கள் தமது பொறுப்புணர்ச்சியற்ற போக்குகளால் சாமத்தியச் சடங்குகள், சம்பிரதாயங்கள் என்ற பெயரில் ஆணாதிக்கவாதிகளை ஊக்குவிக்கின்றனர். ஒரு பெண் தனது இறந்த முட்டையை வெளியேற்றுவது என்பது இயல்பானது. ஆனால் அந்த இயற்கையின் வளர்ச்சி மாற்றத்தை விற்பதிலும் பாதுகாப்பதிலும் சமூக சடங்குகள் என்ற பெயரில் பணச் சடங்கு நடத்தும் சீரழிவுகள் பெண் குழந்தைகளை சுதந்திரமாக இந்த ஆணாதிக்க உலகில் நடமாட விடாது, ஆண்கள் முன் வெட்கிப் போய் வன்முறைக்கு பலியிட தயாரான ஆடுகளாக நடமாவிடுகின்றது இந்த கேடுகெட்ட சமூகம்.

நாடகம், கதை, கவிதை, ஓவியம்... என இலக்கியத்தில் பெண் வர்ணிப்பு என்பது ஆண்முன் கிளர்ச்சியை எற்படுத்தும் உளவியலாக உருப்பெறுகின்றது. இதன் வெளிப்பாட்டை நடைமுறைப்படுத்தும் ஒருவனை குற்றவாளியாகக் காட்டி துண்டுப்பிரசுரம், அனுதாப அஞ்சலிகள் குவிப்பதன் மூலம் இந்த உணர்ச்சியை தூண்டும் போதைகளை மறைமுகமாக பாதுகாக்கின்றனர். போதை மனிதனை மெய் மறக்கச் செய்கின்ற போது சமூகத்தை கட்டுடைத்து ஒழுக்கத்தை மீறிய குற்றத்தை தூண்டியதே, போதையே ஒழிய தனிப்பட்ட அவன் அல்ல. யாரும் பாலியல் வல்லுறவுக்காகப் பிறப்பதில்லை. சமூகம் தான் குற்றவாளிகளை உருவாக்குகின்றது. அது ஒருசிலர் மீது கட்டுப்படுத்தமுடியாத வெறியாக வளர்ந்து விடும்போது திட்டமிட்ட வகையில் அதை அனுபவிக்கத் தொடங்குகின்றது.

கனடா நாட்டில் ஒரு பெண்ணிலைவாதியுடன் உறவு கொண்டது போல் பாவனை செய்து எழுதிய எழுத்தாளரை பாலியல் வல்லுறவு குற்றச்சாட்டில் கம்பிகளை எண்ண வைத்தது. இதே போல் 'எக்சில்-2' இல் பெண்கள் தன் மார்பை இந்தாபிடி இந்தாபிடி என திரிபவர்கள் என்று எழுதியதும், அதை 'அம்மா' இல் போற்றியதையும் பார்க்கின்றோம். ஏன் இதை பிரசுரித்தோர், இதைப் போற்றுவோர் தமது மனைவியுடனோ, தமது தங்கையுடனோ, அல்லது அப் பெண் தனியாகவோ, வேறு பெண்களோ போகும் போது இதை வாசித்து உணர்ச்சி வயப்பட்ட ஒருவன் பெண்கள் தங்கள் மார்பை இந்தாபிடி இந்தாபிடி என பிடிக்க திரிபவர்கள் என பின்நவீனத்துவ தத்துவப்படி பிடித்தால், பிடித்தவனை ஆணாதிக்கவாதி என கூறி களுவில் ஏற்ற பின் நிற்க மாட்டார்கள், எழுதி பிரசுரித்தவர்கள் ஈறாக. ஆனால் உண்மையான குற்றவாளி யார்? இலக்கிய ரசனையால், ஊர் உலகத்தில் இல்லாததையா எழுதினோம் என்றும், கட்டுடைப்பு இப்படித்தான், கவிழ்த்துப் போட்டால் இதுதான், ஒழுங்கு மீறலின் உன்னதமான படைப்பு என பலவாறாக கூறி குற்றத்தைத் தூண்டியவன் தப்பிவிடுகின்றான். இதைத் தான் நடைமுறையில் குற்றவாளி ஊர் உலகத்தில் இல்லாததையா என்று நடைமுறைப்படுத்தினான் என்பதை மறுக்க முடியாது. இலக்கியம் வேறு நடைமுறை வேறு அல்ல இந்த உலகத்தில் என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

ஏன், விடுதலைப் போராட்டத்தை குத்தகைக்கு எடுத்த புலிகள் ஆணாதிக்க ஒழுக்க மரபை பாதுகாக்கும் போராட்டத்தின் தொடர்ச்சியில், வீதிகளில் பெண்கள் மீது பகிடி விடுவோரை, தமது கட்டுப்பாட்டை மீறுவோரை கட்டுப்படுத்த தமது அடியாட்படையாக இந்த பாலியல் வன்முறைக் கொலைகாரரை வைத்து தாக்குதலை நடத்திய நிகழ்வால் தான் பாரிஸ் ஈழமுரசு 16.2.1999 இல் "புல்லுருவிகள்" என ஆசிரியர் தலையங்கம் எழுதியதன் மூலம், மெதுவாக நழுவ முயன்ற போதும், குற்றவாளிகளின் பெயரை வெளியிடாது (பிரெஞ்சு தொலைக் காட்சி பெயரை வெளியிட்டு இருந்தது) கரையோரப் பகுதியைச் சேர்ந்தவர் என்று போட்டது. மக்களிடம் இருந்து எழுந்த "ஏன் பெயர் போடவில்லை" என்ற கேள்வியால் அடுத்த இதழிலில் பெயரை குறிப்பிடுகின்றனர். இந்த கரையோரப் பகுதியைச் சேர்ந்தவர் (ஊரின் பெயர் பாவிக்காது) என்பது சாதி பெயராகி புதிய சர்ச்சையாகி அடுத்த நாள் மன்னிப்புக் கோருகின்றனர். தாம் எப்படி தமது அடாவடித்தனங்களுக்கு இயக்கத்தினுள் வைத்து குற்றவாளிகளை பயன் படுத்தி சேவை பெற்று வளர்ந்ததை சுயவிமர்சனம் செய்து போராட்டத்தை தூய்மைப்படுத்த வேண்டிய பொறுப்பான பணியை கைவிட்டு, யார் அவன் என்பது முதல் பெயரை மறைத்து, ஊரை மறைத்ததன் மூலம் குற்றவாளிகளின் ஊற்று மூலத்தை தொடர்ந்து திறந்தே வைத்துள்ளனர்.

குற்றவாளி ஊரில் இயக்கத்தில் இருந்து விட்டு ஏன் வந்தார், இந்த மாதிரி கொடூரமான கொலைகளை செய்ய இலங்கையில் ஜனநாயகத்தை மறுத்த போராட்டமா காரணம், அங்கு தண்டனை பெற்றவரா, பின் எப்படி மீள இயக்கத்துடன் இயங்கமுடிந்தது, புலிகளின் நிதிசேகரிப்பில் தனிப்பட்ட முறையிலும் பணம் சேர்த்தாரா,

பல பெண்களை மிரட்டி பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கி அதை படமாக்கி மீள மீள பயன்படுத்தியது, வேறு பெண்கள் மீதான கொலைகள் என மக்களால் கேட்கப்படும் பேசப்படும் இதுபோன்ற பல விடயங்கள் பற்றி எல்லாம் யுத்த ஆய்வுபோல் புலிகள் செய்து குற்றவாளிகள் உருவாகும் ஊற்று மூலத்தை கண்டறிவதன் மூலம் தமிழ் மக்களின் நம்பிக்கையை அல்லவா ஊட்டியிருக்க வேண்டும். இல்லாது மக்களுக்குள் மக்கள் பேசிய இரகசியமான விடயமாக இது நீடிக்கும் சமூகம் உள்ள வரை குற்றவாளியின் ஊற்று மூலம் எல்லாவற்றிலும் தொடர்வது தவிர்க்கமுடியாது.

இக் கொடிய வன்முறை சமூகளவில் பாரிய மாற்றத்தை எதிர்நிலையில் தோற்றுவித்துள்ளது. பெண் குழந்தைகள் மீதான கட்டுப்பாடுகள் அடக்குமுறைகள் அதிகரித்துள்ளன. அவர்களின் நியாயமான கேள்விகளை மறுப்பதற்கான நியாயத்தைத் தேடிக் கொடுத்துள்ளது. கவனம் என்ற எச்சரிக்கையுடன் பெண் பிள்ளைகளை ஆணாதிக்கச் சிறைக்குள் பூட்டிவைத்துவிட்டது.

இதை வைத்துப் பிழைக்கும் ஜனநாயமாக சுதந்திரமாக செய்திவிடுவதாக கதையளந்து பத்திரிகை நடத்துவோர், வானொலி தொலைக்காட்சி நடத்துவோர் எல்லாம் பிணத்தின் மீது உண்மைகளை ஆராயத் தவறி, குற்றவாளி மீது தமது திட்டுதல் ஊடாக, குழந்தையின் பால் முகம் மீது தம்மைத் தாம் மறைத்துக் கொண்டனர். பாரீஸ் புத்தகக் கடையில் விற்கும் வக்கிரமான நீலப் பட புத்தகங்கள் மீதும் அஞ்சலிக் கவிதை பாடி, பாரிஸ் வியாபார நிலையங்களில் விற்பனைக்காக பரப்பியுள்ள. இந்திய மலின சஞ்சிகை மீதான கவர்ச்சி பெண்கள் மீது கறுப்புக் கொடி கட்டி துக்கம் பறக்க விட்டதன் மூலம் குற்றவாளிக்கு எதிராகக் காட்டி சபாஸ் பட்டம் பெற்றுக் கொண்டனர். ஆனால் அக் குற்றவாளி கிளுகிளுப்பூட்டும் எத்தனை நீலப்பட புத்தகத்தை படித்தும், எத்தனை கவர்ச்சி நாயகிகளை வாங்கிக் கண்டு களித்த வெறியூட்டுதல்கள் எற்படுத்திய வக்கிரங்களை தூண்ட காரணகர்த்தாவாக இருந்த உங்கள் கைகள் சுத்தமானவையாக கறுப்புக் கொடி கட்டினால் மாறிவிடுமோ? இப்படி உருவேற்றப்பட்ட எத்தனை பேர் ஆணாதிக்க ஒழுங்குக்கு பயந்து உணர்ச்சியை அடக்கியபடி அமைதியாக நடமாடுவர் என்பது மட்டும் மறுக்க முடியாத உண்மையாகும்.

சிறுவர் மீதான பாலியல் வன்முறைகள், சிறுவரையே உழைக்க வைத்து அதில் சுகம் காண்பது எல்லாம் இந்த ஜனநாயக அமைப்பில் பாதுகாக்கப் படுகின்றது. இது நாகரீகம் அடைந்த முதலாளித்துவ நவீனத்துவ வளர்ச்சியிலும், இன்று உலகமயமாகும் பின் நவீனத்துவ கால ஏகாதிபத்தியத்திய மேற்கு நாடுகளிலும்

சிறுவர் மீதான 18 மணிநேர உழைப்பு, சிறுவர் மீதான பாலியல் வன்முறை ஒரு நூற்றாண்டுக்கு முன் மிக கோராமாக இருந்தன. அது சில பண்பியல் மாறுபாட்டுடன் உலகு எங்கும் எல்லா இடத்திலும் உள்ளது. இந்த வன்முறைகளில் ஈடுபடும் கட்டற்ற ஒழுக்க மீறல் அவர்களின் தனித்த பண்புடன் பிறப்பதில்லை. மாறாக இந்த ஆணாதிக்க சமூகம் உற்பத்தி செய்கின்றது. இந்த குற்றத்தின் பொறுப்பாளிகள் நாம் எல்லோரும் என்பதை உணர்ந்து கொள்வதும் அதை மாற்ற நாம் போராடுவதும் அவசியம். குற்றவாளியை கைது செய்தல், தண்டனை கொடுத்தல், கண்டன அறிக்கைகள், கறுப்புக் கொடிகள் சிலர் பிழைக்கவும், நாளை மறந்து போகவும் மட்டுமே நடக்கும். இதன் சமூக ஊற்று மூலத்தை கண்டறிவதும், அந்த நோயை தீர்க்க போராடுவதுமே இக்கொலைக்கு முன் உள்ள பிரச்சினை. நாளை இன்னுமொரு பெண் பாலியல் வன்முறைக்கு உள்ளாகாத சமூகத்தை படைக்க போராடாத வரை இது போல் நடப்பதற்கு துணைபோகின்றோம் என்பதை மறந்தாலும், மறுத்தாலும் அவர்களும் குற்றவாளிதான்.

இந்த பாலியல் வன்முறைக் கொலை சமூக ரீதியில் பாரிய மாற்றத்தை எதிர் நிலையில் ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக பெண் குழந்தைகள் மீதான கட்டுப்பாடு, அடக்குமுறை அதிகரித்துள்ளது. பெண்குழந்தைகளின் நியாயமான கேள்விகள் இதை காட்டி மறுக்க நியாயவாதியாக மாறிவிட்டது. இங்கு ஒரு பெண் குழந்தையை மட்டும் அந்த ஆணாதிக்க காமுகர்களும், இதற்கு துணைபோன கவர்ச்சி வியாபாரிகளும் கொத்திக் கிளறி குழந்தையை அலங்கோலம் செய்து படுகொலை செய்யவில்லை. மாறாக பாரிஸ், புலம்பெயர் சமூகத்தின் எல்லாப் பெண் குழந்தைகளையும் ஆணாதிக்க கொடூரத்துக்குள் சிறைவைக்க அறைகூவல் இட்டு நடைமுறைப் படுத்தியுள்ளது. இந்த பாலியல் வல்லுறவுக் கொலை அந்தப் பெண்ணையும் இச் சமூகத்தில் இருந்து மீட்கவில்லை, எல்லாப் பெண்களையும் கவனம் என்ற ஆணாதிக்க கொடூர சிறைக்குள்ளும் இட்டுச் சென்றுள்ளது.

பெண் குழந்தைகள் உள்ள குடும்பங்களில் பழகும் நல்ல நண்பர்களை, தொழில் ரீதியாக தொழில் புரியும் விசா அற்ற கட்டிடத் தொழிளார்கள் மீது சந்தேகங்கள், சங்கடங்களை விதைத்துச் சென்றுள்ளது. இருக்கக் கூடிய குடும்ப பந்த உறவுகள் சிதைய, கூட்டுக் குடும்பங்கள் சிதைய, குடும்பம் சிதைய முன்னோடியாகியுள்ளது. மனிதர்களின் நல்ல நேச மனப்பான்மை என்பது மேலும் மேலும் சிதைந்து சிதற, பெண் குழந்தைகள் இறுக்கமான கட்டுப்பாட்டுக்குள் நசுங்க, குற்றவாளியின் மூல காரணத்தை ஆராய மறுத்த இச் சமூகம் புதிய குற்றவாளியை உருவாக்க, ஈடுபட குற்றவாளிகள் வழிகாட்டிச் சென்றுள்ளனர்.

(இக் கட்டுரையின் இறுதிப் பகுதியை பிரசுரிப்பதில் எமக்கு உடன்பாடின்மை காரணமாக அவை இங்கு இடம்பெறவில்லை. ஆ.ர் குழு)

பேதமை

சந்தோச அலைமோத
சிரித்த என்னை
அன்னையவள் அதட்டுவது புரிந்தது
பொம்பிளை சிரிச்சா போச்சு,
புகையிலை விரிச்சா போச்சு - என
பழமொழிதனை அள்ளி வீசி
சிரிப்பை அடக்கியதுண்டு!

அண்ணனவன்
அணைகட்ட முடியாது சிரித்த போது
அம்மா அதட்டாது அவனை
அணைத்தபோது
சீறி வெடித்தேன்!

மங்கையிவள் புன்னகையால்
மங்கலம் நடவாதாம்
என்ன பேதமை,
மௌனம் போக்கி நிறையவே விவாதம் செய்தேன்!

அயல் வீட்டு சிறுவனுடன்
போளை அடித்தபோது
பெட்டைப் பிள்ளைக்கு என்ன விளையாட்டு
என்றுரைத்த தந்தையைப் பார்த்து
சினந்தெழுந்தேன்!

நிறையவே விவாதம் செய்தேன்
அன்று தொட்டு இன்று வரை
பெண், ஆண் பேதமைகள் பலமாக
பெண்ணே தாழ்த்தப்பட்டு
தாழ்நிலை போக்கி
உயர் நிலை அடைவதெப்போ?
பெற்றோர் தம் குழந்தைகளை
பேதமை பாராது வளர்த்தால்
பெண்ணவள் இப்புவியில் உயர் நிலை அடைவாள்.

நளாயினி தாமரைச்செல்வன்

அந்தப் பச்சைக் காலறைகள்

நோர்வேஜிய மொழி மூலம். மார்கிரேத் யோகான்சன்
தமிழில். தயாநிதி (நோர்வே)

ஒரு வழக்கமில்லாத விடயம் ஒன்று நிகழும் போது அந்த விடயத்தைச் சுற்றியுள்ள சூழலில் ஒரு பிரத்தியேகமான பாதிப்பினை ஏற்படுத்தியிருப்பதுண்டு. வழமையான பாதுகாப்பான சத்தங்கள் எல்லாம் எங்கோ மறைந்து போக புதிதுபுதிதாக வேறு ஒலிகள் வந்து சேர்வதுண்டு. சில விடயங்கள் தெளிவாக நெருக்கமானதாகவும், சில விடயங்கள் தொலைவிலேயும் அல்லது அந்த இடத்தை விட்டு அகல்வது போலவும் தோன்றும். நீண்டகாலமாகத் தனித்து ஒரு இடத்தில் வசிக்கின்ற ஒருவர் தன்னைச் சுற்றி கேட்பவற்றைக் கொண்டே அடையாளம் காண்கிறான். இப்பிடித்தான் அன்றைய பிற்பகலும் இருந்தது.

புதிய சத்தங்கள் பழையவற்றைப் பிரதியீடு செய்தன. விளக்குகள் முன்பைவிட பிரகாசமாகி விட்டனவா? அல்லது மங்கலாகி விட்டதா? இந்த படி வாசலில் இருந்த விளக்கிற்கு மூடி இருந்ததாக நினைவில்லை. ஏதோ நிகழ்ந்துள்ளதாக இவைகள் கூறுகின்றன. இயந்திர அறையிலிருந்து வரும் இயந்திரங்கள் அழுத்தப்படும் சத்தத்தைக் காணவில்லை. பயங்கர அமைதியாக இருந்தது. நான் அதிலேயே ஒரு கணம் நின்று காதுகொடுத்துக் கேட்டுவிட்டு படியிறங்கினேன்.

நான் இரண்டாவது மாடியருகே வரும் போது மெல்லிய கோபமான குரல் சாண்டினின் வாசலிலிருந்து வந்தது. அவர்களுடைய வாசல் கதவு திறந்திருந்தது.

இங்குதான் ஏதோ நடந்திருக்கவேண்டும்.

என்னைப்போலவே சாண்டின் குடும்பமும் இங்கு வசிக்கின்றனர். நாம் சந்திக்கும் போது சிரித்துக் கொள்வதுண்டு. ஆனால் பழக்கமில்லை. மனைவி கதைக்கக் கூடியவர் என்று நினைக்கிறேன். முப்பதுகளின் நடுப்பகுதியாக இருக்கலாம். இளமையான பதட்டத்தின் சாயல் படிந்த முகம். தடித்த பளபளப்பான தலைமுடி. பெண்குழந்தையை ஒத்த முகம். கணவன் அவர் எப்போதும் தனிமையில்தான். கணவன் கதைக்கக் கூடியவர். பையன்களைப் போல வசீகரமான முகம். சற்று பயந்த சுபாவம் உடையவர் மாதிரி. இது அவருக்கு வயதாகவில்லை என்பதையும் காட்டிக் கொள்கிறது. வாசல் கதவு திறந்திருந்தது. நான் தலையை நீட்டுகிறேன், உள்ளே என்ன நிகழ்கிறது என்பதை அறிவதற்காக. எதற்காக எல்லா அயலவர்களும் கூடி அமைதியாக இருக்கிறார்கள்? ஒருவர் தான் நின்ற இடத்திலிருந்து சற்று தள்ளி நின்றார். திடீரென சாண்டினைக் கண்ட நான் அதிர்ச்சி யடைகிறேன். அவர் நிலத்தில் கிடந்தார். பிறவுண் நிற குழந்தைத்தனமான கண்கள் மேலே பார்த்தபடி கிடந்தார். அவர் இறந்து விட்டார் என்பதில்

எந்தவித சந்தேகமும் இல்லை. பக்கத்து வீட்டுக்காரப் பெண்ணொருத்தி எனது காதில் குசுகுசுத்தாள்.

"இந்த நல்ல மனிசன்"

இறந்தவர் பார்ட்டிக்கான உடையணிந்திருந்தார். புதிய நவீனரக மடிப்புக்கள் நிறைந்த சேட்டினை அணிந்திருந்தார். ஆனால் ஏதோ ஒன்று மட்டும் பொருத்தமற்றதாக இருந்தது. தலைமயிர் அழகில்லாத முறையில் எண்ணை வைத்து இழுக்கப் பட்டிருந்தது. ஜக்கற் போட்டமாதிரி இருந்தது. வழமையான நடைமுறையை நன்கு பின்பற்றியதாகத் தெரிந்தது. கால்கள் இரண்டும் ஒன்றாக சேர்க்கப்பட்டு இருந்தன, அழகான காலணிகள். காலுறைகள் தடிப்பான, வீட்டில் பின்னப்பட்ட கடற்பச்சை நிறத்தவை.

துணைவி சாண் அமைதியாக நின்று ஆறுதலாக கணவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள். சில நேரங்களில் சற்று எழுச்சியடைந்தவராக இருந்தாள். அவள் முழுமையான நிதானத்துடன் இருப்பதாகவும், கைகளை முதுக்குக்கு பின்னால் கட்டியபடி சின்னப் பிள்ளையைப் போலக் காணப்பட்டார். நாகரீகமான சட்டை அணிந்திருந்தார். நிறம் பிரகாசமானதாகவும் குட்டையாகவும் இருந்தது. ஒரு முழங்காலை சற்று சரித்து வைத்திருந்தாள். அவளுக்கு அருகில் ஒரு வயதான பெண் நின்றிருந்தாள். இந்த வயதான பெண்களுக்கு இடையில் ஒரு வயதிருந்திருக்கும் போல இல்லை. திருமணம் செய்த பின் கால ஓட்டத்தை அப்படியே பின்பற்றியிருக்க வேண்டும். அநேகமாக மிகவும் இளமையான காலத்திலேயே நிகழ்ந்திருக்க வேண்டும். அவள் உதவி கிடைக்காத குழந்தை போல அழுது கொண்டிருந்தாள். சற்று நேரத்தில் மகள் அவருடைய காதில் எதையோ குசுகுசுத்தாள் (இது நிகழ்ந்த படியால் மகள் அருகிலேயே நின்றிருக்கவேண்டும்) அந்த வயதான பெண் நிலைமையை கணக்கிடும் தன்மையுடன் குழப்பமாகப் பார்த்தாள். அவர்கள் இருவராலும் தாம் ஒரு அவசரமான நிலையில் இருப்பதை மறைக்க முடியவில்லை. பெண்கள் அவர்களுக்குத் தெரியும் எப்போது அழவேண்டும், எப்போது முக்கிய புள்ளியாக இருப்பது, ஆவலை ஏற்படுத்தக் கூடிய விடயங்களில் பங்கு கொள்வது மிகவும் நல்லதொரு விடயம். சிலவேளை சொத்துக்களுக்கு பின் உரித்தாளராகலாம் இதைவிட வேறு என்ன இவர்களால் எதிர்பார்க்க முடியும்? (மன்னிக்க வேண்டும் நான் இளம் வயதினன்)

உண்மையைக் கூறினால் என்னுடைய அனுதாபங்கள் துணைவி சாண்டின் பக்கம்தான். அவர்தான் உண்மையிலே நம்பக்கூடியவாறு இருக்கிறார். குறைந்தளவு பயத்தை ஏற்படுத்துவதாகவும் இருந்தார் என்பது உறுதி.

ஒரு மனிதன் நுழைவாசல் மூலம் உள்ளே நுழைந்தான். மருத்துவர் அவருக்கு நிறைய வேலைகள் இருப்பதாகத் தெரிந்தது. தனது தொழிலுக்குரிய முறையில் எந்தவித உணர்ச்சிகளும் இன்றி தனது பணியை முடித்துக் கொண்டார். தன்னுடைய

அட்டையில் குறித்துக் கொண்டார். இயந்திரமாகக் கேள்வி கேட்டார். பொலிசாருக்கு ஏற்கனவே தகவல் கொடுக்கப்பட்டிருந்தது. சட்டத்தின் மனிதன் விரைவாக வந்து சேர்ந்தான். உடனேயே சம்பவம் நிகழ்ந்த இடத்தை விட்டு அகலும்படி கேட்டுக் கொண்டான். எங்களிடம் எந்தவித கேள்வியும் கேட்கவில்லை. தேவையில்லாத வேண்டுகோள். யாருமே நிகழ்ந்த அசம்பாவிதத்தின் விளக்கத்தை கேட்காமல் விலக விரும்பவில்லை. பொலிசார் தமது வழமையான நடவடிக்கைகளை ஆரம்பித்தபோது பொலிஸ் அதிபர் தனது குறிப்பேட்டினை வெளியே எடுத்தார். எங்களைப் பார்த்தபடி

"இது எப்பிடி நிகழ்ந்தது? "

திருமதி சாண் தான் நின்ற நிலையை மாற்றிக் கொண்டார்.

"நான் அவரை அடித்து நொருக்கினேன்" என சுலபமாகப் பதிலளித்தார். கைகள் உடலுக்கு பக்கத்தே நீண்டவாக்கில் விழுந்தன. பொலிஸ் அதிபரை தெளிவான கண்களுடன் நோக்கினாள்.

"எதற்காக அவரை இப்படி அடித்து நொருக்கினீர்கள்? "

"அவர் அந்த பச்சை நிறக் காலுறைகளை அணிந்து கொண்டமைக்காக" என சாதாரணமாகப் பதிலளித்தாள்

சில அயலவர்கள் அவளுக்கு மூளை பிசகிவிட்டதோ, அவள் பல தடவைகள் மனநோயாளர்கள் மருத்துவமனைக்கு சென்று திரும்பியவள் தானே, அப்படியும் இருக்கலாம். அந்த வயோதிபத் தாய் பலத்த சத்தத்துடன் விம்மிவிட்டு தனது சகோதரியைப் பார்த்தாள். இருவரும் மிகவும் அழகான தாய் மகள் நாடகத்தை நடத்திக் காட்டினார்கள். ஆனால் எனக்கோ இந்த வீட்டில் நீண்டகாலமாக அசம்பாவிதங்கள் நடந்திருக்க வேண்டும் போல தோன்றியது.

திருமதி சாண் பக்த்திலிருந்த அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். எங்களை எங்கள் வீடுகளுக்கு போகச் சொல்லியும் விசாரணை முடியும் வரை வீட்டைவிட்டு வெளியேற வேண்டாம் என்றும் பணிக்கப்பட்டது.

நான் அன்றிரவு கட்டிலில் கிடந்தபடி அந்த அச்சுறுத்தும் பச்சைநிறக் காலுறைகளைப் பற்றி யோசித்துக் கொண்டு படுத்திருந்தேன். எப்போதாவது அவை பற்றிய உண்மையை அறியவேண்டும் என்று நினைத்துக் கொண்டேன்.

திருமதி சாண்டிற்கு எட்டு வருட சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. நான் அவரைச் சிறையில் சென்று பார்ப்பது என முடிவு செய்தேன். என்னைக்

கண்டதும் சந்தோசத்துடன் வரவேற்பது போல் கையசைத்தார். நாங்கள் வரவேற்பு அறையில் அமர்ந்து கொண்டோம். வரவேற்பறை சந்தோசமான பார்வையாளர்களால் நிறைந்திருந்தது. மிகவும் பணிவாக காவலாளியைப் பார்த்ததும் எமது வேண்டு கோளைப் புரிந்தவர் போல எம்மைத் தனியே விட்டுவிட்டு வெளியேறினார்.

"அனுதாபமும் என்ன நிகழ்ந்தது என்று அறியும் ஆர்வமும் தான் என்னை இங்கே அழைத்து வந்தன"

"எனக்குத் தெரியும்" என்றாள் அவள்.

"இருந்தாலும் யாராவது பார்க்க வருவது சந்தோசம். அன்றைய தினம் உங்களைக் கண்டேன். எனக்கு எல்லாம் தெளிவாக ஞாபகம் இருக்கிறது" அவள் சிரித்தபடி தன்னுடைய பாவாடையை முழங்காலுக்கு கீழே இழுத்துவிட்டாள்.

"நான் அவரைக் கடுமையாக அடித்தேன். அவர் அதைத்தான் விரும்பினார். பல மனிதர்கள் தங்களுடைய தலைவிதியைத் தாங்களே நிர்ணயித்துக் கொள்கிறார்கள். அது நிகழும் போது ஆச்சரியம் அடைந்தவர்களாக இருக்கிறார்கள். இதை உங்களால் புரிந்து கொள்ள முடிகிறதா? அவர் எவ்வளவு ஆச்சரியமடைந்தவராக இருந்தார் என்பதைப் பார்த்தீர்களா? "

நான் தலையசைத்தேன்.

"அந்தப் பச்சைக் காலுறைகள்" என்றேன். "நான் அவைகளுக்கு வருகிறேன் ஆனால் முதலில் அவர் மிகவும் கஸ்டமான வயதில் உள்ள குழந்தையைப் போல இருந்தார். பூச்சாடியில் பூக்களை உதிர்த்து விளையாடுவதற்கு அனுமதியில்லை என்று தெரிந்தும் கிள்ளி விளையாடும் மூன்று வயதுக் குழந்தையை நீங்கள் கட்டாயம் பார்த்திருப்பீர்கள். அந்தக் குழந்தைக்கு கைவிரலில் ஒரு தட்டு விழுவதுண்டு. சில செக்கன்களுக்குப் பின்பு திரும்பவும் அந்த சுட்டுவிரல்கள் அந்த விளையாட்டில் ஈடுபடும். இது நெருப்புடன் விளையாடுவது போல. திரும்பவும் திரும்பவும் அதையே செய்ய முயற்சிக்கும், தண்டனை கிடைக்கும் என்று தெரிந்தபோதிலும். தண்டனை கிடைக்கும் போது மிகவும் கோபத்துடன் பலத்த சத்தமாக அலறும் குழந்தை. இப்படித்தான் எனது கணவனும். பெரும்பாலானவர்கள் நினைக்கிறார்கள் அவர் ஒரு பெரிய மனிதன், அன்பான அழகான மனிதன் என்று. நான் ஏன் அவரைக் கடுமையாக அடித்தேன் என்று உங்களுக்குப் புரிகிறதா?

அவள் என்னை தீவிரமாகப் பார்த்து விட்டு குழந்தையைப் போல நகங்களைக் கடிக்கத் தொடங்கினாள். எனக்கு அவள் ஏன் அவரை அடித்தாள் என்பது உண்மையிலேயே விளங்காதபோதிலும் நான் அதனை அறிவதில் ஆர்வமில்லை என பதிலளித்தேன்.

நாம் எல்லோரும் வாழ்க்கையில் முகமூடிகளை அணிந்து கொள்கிறோம். உளவியலாளர்கள் இதை "தனித்தன்மை" என்று அழைக்கிறார்கள். நாம் வாழ்க்கையின் வேறுபட்ட நிலைமைகளில் வேறுபட்ட வடிவங்களைத் தரிக்கிறோம். எனது கணவன் அழகாக இரக்கமானவராக ஒழுக்கமுள்ள வராகத் தெரிகிறார். ஆனால் நானோ கொலை செய்பவராகத் தெரிகிறேன் இல்லையா? அவள் எனது பதிலுக்காகக் காத்திருக்கவில்லை. கடித்த நகத்துண்டைத் துப்பிவிட்ட திருப்தியுடன் கூறினாள்,

"நான் அப்படித்தான்"

கூரையில் நிர்வாணமான பல்பு ஒளிவீசியது. அன்றைய பிற்பகல் படிகளில் இருந்ததைப் போல, அது சந்தோசமில்லாத நிழலைத் தந்தது. அவள் திடீரென்று சத்தமாகச் சிரித்தாள். மிகவும் தெளிவான குரலில் மீண்டும் தொடர்ந்தாள். பல மனிதர்கள் தங்களுடைய தனித்தன்மையுடன் இணைந்து கொள்கின்றனர். அத்துடன் மற்றவர்களுக்குக் கீழ்ப்பணிந்து நடக்கின்றனர். தங்களுடைய உணர்ச்சிகளை வெளியேற்ற வேண்டுமெனில் இவர்கள் மற்ற மனிதர்களை பாதுகாப்பு வெளிகளாகப் பயன்படுத்துகின்றனர். அன்பான நல்ல மனிதர்கள் கூட நிழலை மற்றவர்கள் மீது பரவவிடுகின்றனர், தெரியுமா? பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவர்கள் தங்களுடைய நிழலை மற்றவர்கள் தாங்கவே அனுமதிக்கின்றனர். என்னுடைய சொந்த நிழலைத் தாங்குகின்ற அதேவேளை இன்னுமொரு நிழலையும் சேர்த்துத் தாங்குவது தாங்குபவருக்கு மிகவும் கடுமையான தண்டனை. நான் அவருடைய நிழலை பத்து வருடங் களுக்கு மேலாக் தாங்கியிருக்கிறேன்.

அவள் அமைதியாக நிமிர்ந்து பார்த்தாள். கழுத்திலும் கன்னப் பகுதியிலும் அவரசமான அடையாளங்கள் தோன்றின. அவள் கையில் வைத்திருந்த கைக்குட்டையை அழுத்திக் கொண்டாள். உங்களுக்குக் கட்டாயம் தெரிந் திருக்கும், நாளாந்தம் ஏற்படும் நரம்புப் பலவீனங்களுக்காக நான் பல தடவைகள் போயிருந்தேன் என்பது. உண்மையில் நான் அங்கு போயிருக்கத் தேலையில்லை. அவர்தான் போயிருக்க வேண்டும். ஆனால் அவருக்கு எல்லாவிதமான அனுதாபமும் எப்போதும் கிடைத்தது. ஏனெனில் அவருக்கு பதட்டப்படும் துணைவியிருக்கிறாள். அவளால் தன்னைக் கட்டுப்படுத்த முடியவில்லை என பலர் கூறிக் கொண்டனர். அனுதாபம் தற்போது கூடக் குறைந்து விடவில்லை. நான் அவருக்கு சலுகை செய்திருக்கிறேன் இல்லையா. அவள் மிகவும் உறைந்து போன வெறுப்படைந்த குரலில் அதைக் கூறினாள். நான் பார்வையினால் அவளை அழைத்திருக்க வேண்டும். திடீரென்று அன்புடன் சிரித்தபடி என்னுடைய கைகளின் மீது தனது கைகளை வைத்தாள்.

"நீங்கள் அவருக்காகப் பரிதாபப்படுகிறீர்கள், இல்லையா? ஏன் அவரை விட்டுப் பிரிந்து போகவில்லை என்று யோசிக்கிறீர்களா?"

அவள் எனது பதிலுக்காகக் காத்திருக்கவில்லை.

மூன்று குழந்தைகளுடன் வெளியே போய் தனித்து வாழ்வது அவ்வளவு சுலபமல்ல. அவர்கள் எனது சகோதரியுடன் இப்போது இருக்கிறார்கள். முன்பு ஒருபோதும் இல்லாத மாதிரி நன்றாக இருக்கிறார்கள். பிரிந்திருப்பதைப் பற்றி யோசிப்பது விவாகரத்துப் பற்றி முடிவெடுக்கிறது எல்லாம் பலவீனமான நரம்புடையவர்கள் என்ற காரணத்திற்காக பல தடவைகள் மருத்துவமனைக்குப் போய் வந்த பின்னணி உடையவர்களுக்கு சுலபமல்ல. இந்தக் காரணத்தால் பிள்ளைகளை இழக்க நேரலாம்.

"அந்தப் பச்சைக் காலுறைகள்" என்றேன் நான்.

அதைச் சொல்கிறேன், நீங்கள் அவருடைய தாயையும் சகோதரியையும் பார்த்தீர்களா?

நான் தலையசைத்தேன்

அந்தக் காலுறைகளை தாய்தான் பின்னியிருந்தார். நான் பல வருடங்களாக உணராத ஒரு சந்தோசத்தை இப்போ உணர்கிறேன்

அவள் யன்னலூடாக வெளியே பார்த்தாள். அப்பாடா, முடிவில் ஒரு மாதிரி தனிய என்னுடைய நிழலுடன். நீங்களே சொல்லுங்க, "எப்பவாவது கிறிஸ்மஸ் பரிசுப் பொருளாக உடுப்புக் கொளுவிறது உங்களுக்குக் கிடைச்சிருக்கா?"

நான் பதில் சொல்லத் தயங்கினேன்.

ஆம். குழந்தைகள் தயாரிக்கும் அழகான துணியால் அல்லது கம்பளி நூலால் அலங்கரிக்கப்பட்ட உடுப்புக் கொளுவுவது இல்லை. ஒரு பெரிய பெட்டி நிறைய மரத்தால் செய்யப்பட்ட கிராண் கோட்டல் என்று அச்சுப் பதிக்கப்பட்டவை, எனக்கு என்னுடைய துணைவன் தந்திருக்கிறார். பிறந்தாள் பரிசாக பர்க்மாக் மரத் தொழிற்சாலை என்று பொறிக்கப்பட்ட சாம்பல் போடும் தட்டினைப் பரிசாக தந்திருக் கிறார். அவருடைய தாயார் துணைவரை இழந்தவர். மிகவும் ஆதிக்கம் செலுத்துபவர். அவருடைய சகோதரி தாயைப் போல. இந்த பலவீனமான பையன்மீது அந்த இரண்டு பெண்களும் என்ன மாதிரியான அதிகாரத்தைப் பாவித்திருப்பார்கள் என்று நீங்களே யோசித்துப் பாருங்கள். வாழ்க்கை முழுவதும் பிரச்சினைதான். அவள் இழிவுபடுத்துகின்ற மாதிரி சிரித்தாள். அவர் தனது குழந்தைப் பருவ நினைவுகளால் அழுத்தப்பட்டு இந்த இரண்டு பெண்களையும் எனக்கு உதாரணமாகக் காட்டினார். ஆனால் நேரடியாக இல்லை. ஆட்கள் இருந்த வேளையில் என்னைப் பற்றி கதைக் கும்போது மூன்றாவது மனிதனைப் பற்றிக் கதைப்பது போல படர்க்கையில் கதைப்பார்.

சிசில் (நான் தான்) அவவுக்கு காசைப் பற்றி சரியாக விளங்குவதில்லை. இது எனக்கு சிவப்புத் துணி காட்டிறமாதிரி. இது அவருக்குத் தெரியும். எனக்கு கோபம் ஏற்பட்டு நான் அதை வெளிப்படுத்தும் வரை அதைத் தொடர்ந்து செய்து

கொண்டிருப்பார். இது அவருடைய வெளிப்பாடு அதோட அவருக்குத் தெரியும் ஆட்கள் போகும்வரை பொறுத்திருப்பேன் என்பதும், ஆட்கள் போன பிறகு அவர் மிகவும் அமைதியாகவும் விரும்பப்படக் கூடியவராகவும் இருப்பார். நான் எப்பவோ "கொலை" செய்திருக்கவேண்டும். அறையில் வெப்பமாக இல்லாத போதிலும் அவள் அணிந்திருந்த பருத்தித் துணிசட்டையின் கையிடுக்குகளில் வியர்வைத் திட்டுகள் ஏற்பட்டிருப்பதை அவதானித்தேன். ஆம் எனக்கு கோபம் வருவதுண்டு. அதில் என்ன பிழை இருக்கிறது, பெறுமதியான எதிரியைச் சந்திக்கும் போது. ஆனால் என்னுடைய கைகளில் ஒரு வழுக்கிற சோப்புத் துண்டும் நுரையோடை கூடின ஸ்பொன்சும் கிடைத்தது. எனக்கு அயலவர்கள் கதைத்துக் கொண்டவற்றின் அர்த்தங்கள் புரியத்தொடங்கின. "பாவம் அந்த மனிசன். மனநோயுள்ள பொம்பிளை. அந்த மனிசன் சரியாகக் கஸ்டப்பட்டிருக்க வேண்டும்".

அவள் எனது எண்ணவோட்டத்தை புரிந்து கொண்டிருக்க வேண்டும். சாதுவாகச் சிரித்தபடி மெதுவாகக் கூறினாள். நீங்களும் அவர்களைப் போல முடிவுக்கு வந்திருப்பீர்கள் என எனக்குப் புரிகிறது. அழகான அன்பான துணைவிகள் கோபம் வரும் போது பூச்சாடிகளை சுவரில் எறிவதில்லை. நீங்கள் சொல்வதைப் பார்த்தால் கோபக்காரர் என்பதை மறுக்க முடியாமல் இருக்கிறது.

இப்போது .முன்பக்கமாக குனிந்து கொண்டார். உங்களுக்குப் புரியவில்லையா? நீங்கள் கட்டாயம் புரிந்து கொள்ள வேண்டும். நான் இரண்டு பேருக்குமான எனது நடவடிக்கைகளைக் கவனிக்க வேண்டும். அதுதான் அவருக்கு விருப்பம். அவருக்கு தனது தாய் சகோதரி மீதும் என் மீதும், ஏன் வேலை வழங்கியவர் மீதும் நிறையவே ஆத்திரம் இருந்தது. தன்னுடைய சிரித்த அன்பான பொறுமையுடைய தந்தை துணைவன் என்ற முகங்களை இழக்காமல் தன்னுடைய ஆத்திரங்களைத் தீர்த்துக் கொள்வதற்கான வழி தெரிந்திருந்தது. என்னை ஆத்திரமடையச் செய்வது. வசீகரமாக அப்பாவித்தனமாக தன்னைக் காட்டிக் கொண்டு விருந்தினர்களும் பிள்ளைகளும் என்னைப் பார்த்து மிகவும் வெட்கக் கேடான முறையில் சிரிக்கும் வண்ணம் என்னைப் பயன்படுத்தினார்.சிசில் என்னுடைய "சின்னக் குருவியே" என்று என்னைக் கூப்பிட்டபடி தன்னைப் பற்றி மற்றவர்கள் தேவை ஏற்படும் பட்சத்தில் மட்டும் ஒரு கிளாஸ் குடிக்கும் நபராக கதைக்கக் கூடிய மாதிரி ஒரு படத்தை மற்றவர்களிடம் ஏற்படுத்துவார். எங்களுக்குத் தெரியும் தனது கொந்தளிப்புகளைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்ருவருவதற்குத் தான் குடிக்கிறார்கள் என்று. மருத்துவரிடம் சென்று குளிசைகள் மூலம் மனக்கொந்தளிப்பைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதை விட இதனைப் பாவிப்பதன் மூலம் கட்டுப்படுத்துவது மிகவும் நல்லதல்லவா,

சிசிலுக்கு குளிசைகள் இல்லாமல் நித்திரை கொள்ளமாட்டார். ஆனால் நான் கல் மாதிரி நித்திரை கொள்வேன். அதோட நான் நல்ல மனநிலையோட

நித்திரை கொள்ளுவேன். அவள் ஆழமாக மூச்சை உள்ளே இழுத்தாள். இனி இந்த விளக்கை மூடி இருக்கும் திரையும் அந்த நாவல் நிற சுவற்றரும்...

"என்ன சாமான் அது"

இந்த சாம்பல் நிற சுவற்றர். அது அவருடைய தாய் பின்னியது. அவர் சின்னப் பையனாக இருக்கும் போது பின்னியது. முப்பது வருடங்களுக்கு முன்பு அது அளவில்லாமல் போனதுடன் கிழிந்து மிகவும் மோசமான நிலையை அடைந்திருந்தது. பயத்தை ஏற்படுத்தக் கூடிய நிறமும் கூட. அவருக்கு பழைய பொருட்கள் மீதான பாசமும் பற்றும் இருக்கும் என்று எனக்குத் தென்பட்டிருந்தால் சிலவேளை நான் அதைப்பற்றி கருத்தில் எடுத்திருக்க மாட்டேன். ஆனால் எனக்கு எல்லையில்லாத எரிச்சலை ஏற்படுத்தும் என்று தெரிந்தும் அதை அவர் செய்தார். நான் கைவேலை களில் மிகவும் கெட்டிக்காரி. நான் பல அழகான சுவற்றர்களை அவருக்காக பின்னியிருக்கிறேன். ஆனாலும் அந்த நாவல் நிற சுவற்றர் தான் எப்போதும் தெரிவில் முதலிடம் பிடிக்கும். விருந்தினர்கள் வீட்டுக்கு வரும் வேளையில் குறிப்பிட்ட நேரத்தில் அந்த நாவல் நிற சுவற்றரை அணிந்து கொண்டு வாசல் கதவைத் திறந்து விருந்தினரை தனது வழமையான வரவேற்புடன், "நீங்கள் வந்துவிட்டீர்களா? சிசில் என்னை உடுப்பு மாற்றும் படி நச்சரித்துக் கொண்டிருக்கிறாள். ஆனால் நான் இதுபற்றி பெரிதாக கவனத்தில் கொள்வதில்லை உங்களுக்குத் தெரியும் தானே" என வரவேற்பார். அந்த அன்பான உற்சாகமான குடும்பத் தலைவன் என்ற பாத்திரம் அறிமுகப்படுத்தப் பட்டுவிடும். அவருடைய துணைவி இரண்டும் கெட்ட நிலையில்... ஆம் நான் பாரம்பரியத்திற்குக் கட்டுப்பட வேண்டும்.

"அந்த விளக்கை மூடியிருக்கும் திரை"... ஒவ்வொரு நாளும் அவர் காலையில் சவரம் செய்யும் போது ஒரு விளக்குப் பொருத்தியிருக்கும் மின் இணைப்பைத்தான் பாவிப்பார். அவருக்கு நல்லாவே தெரியும், அந்த விளக்கு எனக்கு மிகவும் பிடித்தமானது என்று. அந்த விளக்கிற்கு காலையில் நான் தயாரித்த விலையுயர்ந்த பட்டுச் திரைச்சீலை ஒன்றைப் பொருத்தியிருந்தேன். அவர் ஒவ்வொரு தடவையும் மின் தொடர்பைத் துண்டிக்கும் போது அந்த விளக்குத் திரையின் ஓரம் முழுவதும் சவர்க்காரத்தின் நுரைப்புப் படியும் படி கவனித்துக் கொண்டார். நீங்கள் நினைக்கலாம் இது பற்பசை ரியூபில் பிழையான இடத்தில் அழுத்துவதை குறை கூறுவது போல மிகவும் சின்ன விடயம் என்று. ஆனால் ஒரு வளர்ந்த மனிதன் ஒவ்வொரு நாளும் எரிச்சலை ஏற்படுத்தும் என்று தெரிந்து கொண்டும் மற்றவர்களைக் கோபப்படுத்து வதற்கான செயலில் ஈடுபடுவதை என்ன செய்வது. அந்த விளக்கு மூடியை மாற்றியிருக்கலாம், அப்படியென்றால் அவர் வேறு ஏதாவது ஒன்றைக் கண்டு பிடித்திருப்பார். அந்தப் பச்சைக் காலுறைகளுக்கு வருகிறேன்...

நாங்கள் அன்று பிற்பகல் விருந்திற்கு செல்வதாக இருந்தோம், என்னுடைய குடும்பத்தினரிடம். 50 வருடத்தை நிறைவுசெய்வது பற்றியது. விருந்திற்காக சிறிய சிறிய மடிப்புக்களை உடைய சேட்டும் கறுப்பு நிற ரையும். குடும்பங்களை விருந்திற்கு

அழைப்பது, பாரம்பரியங்கள் விருந்துகள் பேச்சு என்பன எனக்கு மிகவும் பிடித்தவை. ஆனால் அவருக்குப் பயம். அவர் அந்த விருந்திற்கு அணியும் உடையை வாடகைக்கு வாங்க வேண்டியிருந்தது. அதுவே அவருக்கு தரக்குறைவாக இருந்தது. அதை சமப்படுத்துவதற்காக லாச்சியினுள் இருந்த காலுறைகளை எடுத்துக் கொண்டார். இவற்றை அணிந்தபடி வரவேற்பறையில் கைகளை பொக்கற்றினுள் வைத்தபடி காற்சட்டையின் கால்களை இயன்றவரை உயர்த்தி அந்தக் காலுறைகளின் நிறம் எனது கண்களுக்குத் தெரியக் கூடியவாறு சுற்றிவந்தார்.

அன்பான நல்ல மனிதர்கள் கூட நிழலை மற்றவர்கள் மீது பரவ விடுகின்றனர், தெரியுமா? பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவர்கள் தங்களுடைய நிழலை மற்றவர்கள் தாங்கவே அனுமதிக்கின்றனர்.

வாடகைக் கார் வெளியில் எமக்காக காத்துக் கொண்டிருந்தது. நான் உடையணிந்து தயாராகிவிட்டேன். என்னை அலங்கரித்து வெளிர் நிற நீண்ட தோல் கையுறைகளை அணிந்திருந்தேன். முத்துக்களால் அலங்கரிக்கப்பட்ட விருந்துகளுக்கு பாவிக்கும் கைப்பையையும் எடுத்துக் கொண்டேன். "அந்தக் காலுறைகளை கழற்றுங்க" என்று மிகவும் அமைதியான குரலில் கூறினேன். வாடகைக் கார் காத்திருக்கிறது விரைவாக போகவேண்டும் என்றேன். ஆனால் அவர் தொடர்ந்தும் கர்வத்துடன் நடந்தபடி, அழகான காலுறைகள். அம்மா எனக்காகப் பின்னியவை, வீட்டில் தயாரிக்கப்பட்டவை, உண்மையிலேயே மிகவும் நல்லவை, இந்த மாதிரியான, விடயங்களில் ரசனையுள்ள துணைவி கிடைக்காதது துர்ப்பாக்கியம்தான் என்று சொல்லி விட்டு சாய்மணைக் கதிரையில் அமர்ந்து கால்களை மேசைமீது தூக்கி வைத்துக் கொண்டார்.

நான் படுக்கையறையினுள் சென்று உடைகளை மாற்றி வழக்கமாக பாவிக்கும் உடையை அணிந்து கொண்டு அவருடைய உடைகள் வைக்கும் அலுமாரியில் இருந்த இரும்புச்சாமான் பெட்டியிலிருந்து இரும்புத் துண்டு ஒன்றை எடுத்து வந்து வரவேற்பறையில் இருந்த அவரை அடித்து நொருக்கினே, இதுதான் நடந்தது. அந்த இறக்கின்ற வேளையில் அவர் விடுதலையடைந்ததாக நான் கருதுகிறேன். அவரால் வாழ்க்கையை நன்றாக அமைத்துக் கொள்ள முடியாது, உங்களுக்குப் புரிகிறதா?

திடீரென்று அவள் அழ ஆரம்பித்தாள். சிறிது நேரத்தின் பின் குழப்பமான பார்வையுடன் கூறினாள். நீங்கள் பச்சை நிற, வீட்டில் பின்னப்பட்ட காலுறைகளை விருந்திற்கு அணியும் உடையுடன் அணியமாட்டீர்கள் அல்லவா?

"இல்லை" என இயல்பாக பதிலளித்தேன்

●

குறும்படம்

நல்லதோர் வீணை செய்து...

ஆணாதிக்கத்தை நியாயப்படுத்துகிறதா?

1998 இல் மாவீரர் தினத்தையொட்டி பிரான்ஸ் கலைப் பண்பாட்டுக் கழகம் நடாத்திய குறுந்திரைப்படப் போட்டிக்கு சுவிஸில் இருந்து அனுப்பப்பட்ட ஒரு குறுந்திரைப்படம் 'நல்லதோர் வீணைசெய்து'

இது தொடர்பான விமர்சன அரங்கொன்று சூரிச் இல் அண்மையில் நடைபெற்றது. அக் குறுந்திரைப்படம் தொடர்பான ஒரு பார்வை இது.

குறுந்திரைப்படம் - நல்லதோர் வீணை செய்து
தயாரிப்பு - ஜெகாதரன் (சுவிஸ்)
கரு - இராணுவத்தால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட பெண் ஒருத்தி தனது தாயின் வற்புறுத்தலால் வெளிநாடு வந்த போதும் குடும்ப வாழ்வில் இணைய முடியாமல் தாயகத்திற்கு திரும்பிச் செல்ல முடிவு செய்கிறாள்.

தனக்கும், இன்னும் பல பெண்களுக்கும் நடந்த இதே மாதிரியான வன்முறைகளுக்கு எதிராகப் போராடப் போவதாக சொல்கிறாள்.

ஒரு குறுந்திரைப் படத்திற்கான முழுமையான விமர்சனம் அதன் கரு, இசை, நடிப்பாற்றல், தொழில்நுட்பம் என்பவற்றின் அடிப்படையில் செய்யப்படவேண்டும் என்பதில் தப்பில்லை. எனினும் குறிப்பிட்ட குறுந்திரைப் படத்தில் உள்ள இசை, நடிப்பு, தொழில்நுட்பம் என்பனவற்றை ஒரு வரையறைக்குள்ளே நின்றே விமர்சனம் செய்ய வேண்டிய நிலையுள்ளது. ஏனெனில் அப் பிரிவுகளில் காணப்படுகின்ற பற்றாக்குறையான வளங்கள், பொருளாதாரப் பிரச்சினைகள், நடிகர், நடிகைகளை பெறுவதில் உள்ள கஷ்டங்கள் என்று பார்த்து விமர்சனம் செய்யும்போது அது ஒரு வரையறைக்குட்பட்டதாகவே அமைய முடியும். அத்தோடு எனக்கு முன்னர்

விமர்சனம் செய்த பலரும் மேற்சொன்ன பரப்புக்குள்ளேயே அதிகம் நின்று விமர்சித்தார்கள். இதனால் அவர்களால் பெரிதும் கவனத்தில் கொள்ளப்படாத இக் குறுந்திரைப் படத்தின் கதை, கரு பற்றியே நான் எனது விமர்சனத்தை முன்வைக்கின்றேன். ஏனெனில் நாங்கள் கருவில் கூட வரண்டவர்களாகவே இருக்கக் கூடாது. இக் குறுந்திரைப் படத்தின் ஆரம்பமே அது ஒரு குறுந்திரைப் படம் அல்ல என்ற உள்ளுர உணர்வை ஏற்படுத்தி விடுகின்றது. தம்பூரா ஏந்திய மீரா பொம்மை காட்டப்படுகின்ற ஆரம்பக் காட்சியே அது.

மற்றது அந்தப் பெண் இராணுவத்தினால் இழைக்கப்பட்ட காட்சியொன்றைக் கனவு கண்டு எழும்பும்போது அங்கு காட்டப்படுகின்ற அந்த இராணுவ அழிப்புக் காட்சியும் குறுந்திரைப் படத்திற்கு உரியதாக இல்லை. அது 'பம்பாய்' திரைப்படத்தின் ஒரு காட்சியை நினைவூட்டுகிறது. இந்த இரு நிகழ்வுகளுக்கும் உரிய நெறியாள்கை யானது ஒரு குறுந்திரைப் படத்திற்குரிய நெறியாள்கையாகத் தெரிவதை விடவும், ஒரு சினிமாவுக்கான நெறியாள்கையாகவும், சினிமாப் பாணியாகவும் இருப்பதனால் இச் சந்தர்ப்பங்களில் 'நல்லதோர் வீணை செய்து' தனது குறும்படத் தன்மையை இழந்து விடுகின்றது.

ஆரம்பத்தில் குறிப்பிட்டது போன்று கதைக்கு வருகின்றேன். இக் கதையில் ஒரு பெண் சித்தரிக்கப் பட்டிருக்கின்ற விதம் ஆணாதிக்கத்திற்கு சிறந்த உதாரணமாக அமைந்துள்ளது. அவளை திருமணம் செய்யக் கூப்பிட்ட அந்த ஆணும், அவனது நண்பர்களும் அவள் பற்றி மிகவும் கேவலமான எண்ணங்களைக் கொண்டிருக்கின்றனர். எமது மரபுவழிச் சமூகத்தில் இருக்கின்ற அந்த பிற்போக்குத் தன்மைகள் இங்கு காட்டப்பட்டுள்ள விதம் அப் போக்கை நியாயப்படுத்துவதாக அமைந்துள்ளது.

சாப்பாட்டைப் போட்டுக்கொண்டு வாங்கோ...

தேத்தண்ணீர் போட்டுக்கொண்டு வாங்கோ...

பொன்னுக்கு மயங்காத பெண் உண்டா...

உடுப்பு வாங்கி வந்து கொடுத்தல்...

போராடப் போகிறீர்களோ? கரப்பான் பூச்சிக்கே பயந்த நீங்கள்...

ஏமாற்றி வந்தவள்...

அவளே தன்னை தாழம்பூ எனப் பாடும் பாடல்...

படம் தொடங்கி முடியும் வரையும் அந்தக் கதாநாயகன் -வீட்டில் இல்லாத நேரம் தவிர- தொலைக்காட்சிக்கு முன்னே அமர்ந்திருக்கிறார். அவளுக்கு சமையல் கட்டளைகளை இடுகிறார். அவள் கதாநாயகனோடு இணங்கி வருகின்றாள் இல்லை என்ற சந்தர்ப்பங்களில் அவரது நண்பன் இப்படிச் சொல்கிறார், 'பொன்னுக்கு மயங்காத பெண் உண்டா?' அதாவது தங்கம் உடுப்பு இவைகளை வாங்கிக் கொடுத்தால் பெண்களைத் தங்கள் வழிக்கு இழுத்து விடலாம் என்ற தவறான கருத்துடன் இப் படம் நகர்கின்றது. அவளது மனக்குமுறல்களை, அவள் அந்நியமாகிப் போவதற்கான காரணத்தை அறிய முற்படுவதைத் தவிர்த்து, அந்த ஆண்கள் அவளை தங்கள் வழிக்குக் கொண்டு வரக்கூடிய சாதாரண விடயங்களிலேயே கவனம் செலுத்துகின்றனர்.

எமது சமூகத்தில் உள்ள தவறான போக்குகளை இவை காட்டுவதாக இருப்பினும் அத் தவறான போக்குகளுக்கான மறுப்புக்கள் ஒரு இடத்திலும் முன்வைக்கப் படவில்லை. இதனால் அவை நியாயப்படுத்தப் படுவதாகவே கொள்ள வேண்டியுள்ளது. புரட்சிகரமான மாற்றுக் கருத்து எதுவும் அங்கு முன்வைக்கப்பட வில்லை. அவள் தன்னை தாழம்பூ என பூசைக்கு உதவாதவள் என பாடும்படி நிர்பந்திக்கப் பட்டிருக்கின்றாள். தான் இராணுவத்தால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட செய்தியை அந்த ஆணிடம் அவள் சொல்லும் போது அந்த வீட்டின் ஒரு மூலையில் கூனிக்குறுகிப் போகின்றாள்; ஒப்பாரி வைக்கின்றாள். இது ஒரு சாதாரண வழமையான நிகழ்வாகினும், அதை அப்படியே காட்டுவதன் மூலம் இச் சமூகத்திற்கு அப் பாத்திரம் சொல்ல வந்தது என்ன?

பாலியல் வல்லுறவுக்கு உட்பட்டதற்காக வாழ்வே இல்லாமல் போனவள் போன்றே அவள் தன்னைக் காட்டிக்கொள்ள வைக்கப்பட்டுள்ளாள். அதற்கு மாறாக ஒரு புதுமைப் பெண்ணாக அவள் காட்டப்படவில்லை. தனக்கு நடந்த கொடுமைக்கு எதிராக தாயகத்திற்குப் போய் போராடப் புறப்படும் அவள் இங்கு தனக்கு எதிராக இழைக்கப்பட்ட விடயங்களுக்கு மறுப்புத் தெரிவிக்க முடியாதவளாகக் காட்டப்படு கிறாள். இந்தப் படத்தில் அவள் போராடப் போகின்றேன் என்று சொல்லும்போது

கரப்பான் பூச்சிக்கே பயந்த நீங்கள் என்று கூறப்படுவதும் பாதிக்கப்பட்ட பெண்கள் தான் இயக்கத்தில் சேர்ந்து போராடப் போகின்றாள்; ஏனெனில் அவளுக்கு வேறு வாழ்வில்லை என்பது போன்றும் காட்டப்படுவதும் பெண்கள் தொடர்பான மிகவும் மோசமான மதிப்பீடுளாகும்.

கலை, இலக்கியங்கள் முற்றும் முழுதாக எமது போராட்டத்தை சித்தரிப்பனவாக மட்டும்தான் அமைய வேண்டும் என்ற நிலை மாற்றப்படவேண்டும். அண்மைக்காலங்களில் இது ஒரு நோயாகப் பரவி வருகின்றது.

மொத்தமாகவே இங்கு அந்தப் பெண்ணுக்கு எதிராக மூன்று ஆண்கள் தமது கருத்துக்களைத் தந்திரமாக திணிக்க முற்படுவதும், தம் வழிக்கு கொண்டுவர திட்டமிடுவதுமாகவும் இது உள்ளது. நவீனத்துவ, பின்நவீனத்துவ அடிப்படையில் நோக்குகையில் இப் படம் ஒரு தவறான கருத்தை வலியுறுத்துவதாகவே அமைகின்றது. தயாரிப்பாளர் நினைத்தது ஒன்று ஆனால் நடந்தது ஒன்று. சம்பவங்களைத் தொகுத்த போது குறுந்திரைப்படத்தின் மறுபக்கம் எதிரான முடிவுக்கு எம்மைக் கொண்டு செல்கின்றது.

இத் திரைப்படம் தொடர்பாக இன்னும் சில விடயங்களையும் முன்வைக்க வேண்டும். சமகாலம்=போராட்டம் என்ற தவறான கருத்து வேரூன்றி உள்ளது. இந் நிலை மாற்றப்பட வேண்டும். சமகாலத்தின் ஒரு பகுதியே போராட்டம்; போராட்டமே சமகாலம் அல்ல. போராட்டத்தில் பல பக்கங்கள் உண்டு. அதில் ஒரு பக்கம்தான் ஆயுதப் போராட்டம் என்று அப் பெண் ஒரு சந்தர்ப்பத்தில் கூறுகிறாள். அப்படித்தான் சமகாலம் என்பதும் பல பக்கங்களைக் கொண்டது. அதில் ஒரு பக்கம்தான் எமது விடுதலைப் போராட்டம். இதனால் கலை, இலக்கியங்கள் முற்றும் முழுதாக எமது போராட்டத்தை சித்தரிப்பனவாக மட்டும்தான் அமைய வேண்டும் என்ற நிலை மாற்றப்பட வேண்டும். அண்மைக் காலங்களில் இது ஒரு நோயாகப் பரவி வருகின்றது. இது தமிழ்க் கலை, இலக்கியத்தில் ஒரு தேக்கத்திற்கு வழி வகுப்பதாக அமையலாம்.

மற்றது போட்டிக்காக தயாரிக்கப்படும் படைப்புக்களில் வெற்றி பெறவேண்டும் என்ற 'இலக்கு' மேலோங்குகின்றது. இதனால் போட்டியை நடாத்துபவர்களை அவர்கள் சார்பான மத்தியஸ்தர்களை திருப்திப்படுத்தும் வகையில் கலை இலக்கியங்கள் படைக்கப்படுகின்ற போக்கு மாற்றப்பட வேண்டும். இவற்றின் மூலம் பரிசில்கள் பெறலாம்; ஆனால் சமூகத்தை விழிப்படையச் செய்ய முடியாது.

நல்லதோர் வீணை செய்து... என்று பாரதியின் பாடல் வரிகளைத் தனது பெயராகக் கொண்ட இந்தக் குறுந்திரைப்படம் பாரதி நூற்றாண்டு முடிந்து பல ஆண்டுகள் சென்ற பின்பும் இன்னும் பழைய ஆணாதிக்க கருத்துக்களின் மேலாதிக்கத்தையே நியாயப்படுத்துவதாக உள்ளது.

தனக்கு குடும்ப வாழ்க்கையில் ஈடுபாடில்லை என கூறும் அவள் தாயகம் செல்லப்போவதாக சொல்கிறாள். அதுதான் அவள் எடுத்த முடிவு. ஆனால் அவளின் அந்த முடிவை மாற்றுவதற்கு அவன் அவளுக்கு சொல்லுகின்ற 'ஆலோசனைகள்' உண்மையில் ஒரு அச்சுறுத்தலாகவும், திணிப்பாகவும் அமைந்துள்ளன.

- அழகுகுணசீலன் (சுவிஸ்)

பெண்ணிலைவாதம் - சில கேள்விகள்

பெண்கள் வீட்டுவேலைகளில் அதிக அக்கறையுள்ளவர்களாக இருப்பதால் ஆண்களைவிட அவர்கள் குறைந்தளவு உற்பத்தியைச் செய்வதுதான் வேலைத்தளங்களில் காணப்படும் சமத்துவமின்மைக்கு உண்மையான காரணம் இல்லையா?

ஒரு குடும்பத் தலைவனாக இருக்கும் ஆணுக்கு, 'குடும்ப ஊதியம்' கொடுக்கும் முறையைப் பின்பற்றுவதற்கு ஆதாரமாக முதலாளித்துவம் இந்த வாதத்தை முன்வைக்கிறது. அதாவது ஒரு குடும்பத் தலைவனுக்கும், அவனுடைய மனைவி க்கும் மற்றும் குழந்தைகளுக்கும் வாழ்க்கையை நடத்தத் தேவையான ஊதியத்தைக் கொடுக்கும் முறையே இது. இக் கருத்தின்படி உற்பத்தியில் ஈடுபடும் பெண்கள், குடும்பத்திற்குத் தேவையான மேலதிக வருமானத்திற்காகவே எனக் கருதப்பட்டு சம வேலைகளுக்கும் குறைந்த ஊதியத்தையே பெறுகிறார்கள். ஆனால், உண்மை நிலை சற்று வேறுபட்டதாகவே இருக்கிறது. பல நாடுகளில் மேற்கோள்ளப்பட்ட ஆய்வுகளில் 25 வீதம் முதல் 40 வீதம் வரையிலான குடும்பங்கள், பெண்களின் வருமானத்திலேயே தங்கியுள்ளன அல்லது பெண்களின் தலைமையிலான தனிக் குடும்பங்களாக இயங்குகின்றது என்று தெரிவிக்கின்றன. இவர்களில் பெரும்பாலான பெண்கள் ஏழ்மையில் உழல்கின்றனர். இவர்கள் முதலாளித்துவ, தந்தைவழி அமைப்பின் ஏற்புகளால் வேலைத்தளங்களில் பாரபட்சமாக நடத்தப்படுகின்றனர்.

இத்துடன் இன்னொரு உண்மையையும் நாம் கவனிக்கவேண்டும். தொழிற்சாலை, வயல் அல்லது பெருந்தோட்டங்களில் வேலைசெய்யும் பெண்கள் மேலும் பல மணி நேரங்களை சமையல், துப்பரவு செய்தல், துணி துவைத்தல், தண்ணீர் எடுத்தல், விறகு சேகரித்தல் போன்ற அலுப்பூட்டும் வேலைகளைச் செய்வதிலும் செலவிட வேண்டியவர்களாக இருக்கின்றனர். பெண்கள் இரட்டிப்பு நாட்களை இரட்டிப்பு சுமைகளை, இரட்டிப்பு ஊசலாட்டங்களை அனுபவிக்கும் நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கப் படுகின்றனர். அதாவது ஊதியம் பெறும் உழைப்பின் (உழைப்பு சக்தியின் ஒரு பகுதியாக) பளுவையும், ஊதியம் பெறாத உழைப்பின் (வீடுகளில் செய்யப்படும் வேலை)' பளுவையும் ஒன்றுசேர சுமக்க வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். இந்த இரட்டிப்புப் பளுவானது பெண்கள் தகுதியான வேலைகளைப் பெறுவதிலும் பயிற்சிகள் பெற்று சிறப்பான தொழில்களில் திறம்பட முன்னேறுவதிலும் இடையூறாகவே இருந்து வருகிறது.

எனினும் நிச்சயமாக நவீனமயமாக்கல் மூலம் பெண்கள் சமூகத்தில் தமக்குரிய இடத்தைப் பெறுவார்கள் அவர்கள் வீட்டில் வேலைசெய்யும் வேலைப்பளு குறைந்து போகும், அவர்கள் வெளியே சென்று உழைத்து பொருளாதார சுதந்திரத்தைப் பெறுவார்கள் அல்லவா?

நவீனமயமாக்கல் திட்டங்களில் கருத்தியல் ரீதியாகவும் நடைமுறை ரீதியாகவும் ஆண்சார்பு இயல்பாகவே காணப்படுவதால் உழைப்பு சக்தியிலிருந்து பெண்கள் புறக்கணிக்கப்பட்டு வருவது மட்டுமல்ல, சில இடங்களில் வேலையிலிருந்து நீக்கப்பட்டும் இருக்கிறார்கள் என ஆதாரங்கள் இருக்கின்றன. உதாரணமாக பஞ்சாப் மாநிலங்களில் (இந்தியாவிலும், பாகிஸ்தானிலும்) ஏற்பட்ட கூடுதலான இயந்திர மயமாக்கப்படுதலோடு கூடிய பசுமைப் புரட்சி, பெண்கள் பாரம்பரியமாகச் செய்து வந்த விவசாயத் தொழில்களை அவர்களிடமிருந்து பறித்தெடுத்தது. தொழில்நுட்ப வேலைகள் ஆண்களுக்கே பிரதானமாக ஒதுக்கப்பட்டதால் பெண்கள் வேலையில்லாப் பிரச்சினையை எதிர்நோக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர். மேலும் இத்தகைய அதிகப்படியான செல்வக் குவிப்புக்கள், செல்வச் செழிப்புப் பெற்ற விவசாயிகள் தமது குடும்பத்திலுள்ள பெண்களை அந்தஸ்தின் சின்னமாக வீட்டுக்குள்ளேயே முடக்கிப் போடவும் வழிவகுத்தது.

இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட மகாவலித் திட்டம் இத்தகைய பிரச்சினையையே ஏற்படுத்தியது. மிகக் குறைந்தளவிலான நிலங்களே பெண் விவசாயிகளுக்கென ஒதுக்கட்டடது. இதனால் இப் பெண்களுக்கு கடன் உதவி, பயிற்சி பெறும் அனுகூலங்கள் போன்றவை கிடைப்பதிலே சிரமங்கள் ஏற்பட்டன. இக் காரணங்களால் இவர்கள் மிகக் குறைந்த ஊதியம் தரும் வேலைகளைச் செய்ய நிர்ப்பந்திக்கப் படுகிறார்கள். இதனால் அவர்களுக்கு பொருளாதார சுதந்திரத்தை எட்டும் சாத்தியங்களும் மறுக்கப்படுகின்றன. பங்களாதேசிலும் நேபாளத்திலும் கூட இத்தகைய போக்குகள் காணப்படுகின்றன. எனவே தற்கால வளர்ச்சித் திட்டங்களும் நவீனப்படுத்தலும் எங்கள் நாடுகளின் எல்லாப் பெண்களின் அந்தஸ்தையும் நிலைமை யையும் முன்னேற்றமடையச் செய்வதற்கான சாத்தியக் கூறுகள் மிகக் குறைவாகவே உள்ளன.

இதனால்தான் வளர்ச்சித் திட்டங்கள் எந்தெந்த வடிவங்களில் பெண்களுக்கு எதிராக நடைமுறைப் படுத்தப்படுகின்றன என்று கூட்டிக்காட்டி பெண்களின் மேம்பாட்டுக்கு வழிவகுக்கும் கொள்கைகளுக்காகவும் திட்டங்களுக்காகவும் வற்புறுத்தும் அவசியம் பெண்ணிலைவாதிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

(தொடரும்)

நூல் அறிமுகம்

கனல்

நான்கு பெண்கள் எழுதிய பதின்மூன்று கவிதைகள் அடங்கிய இக் கவிதைத் தொகுதி கனல். இலங்கையில் மட்டக்களப்பில் இயங்கிக் கொண்டிருக்கும் சூர்யா பெண்கள் அமைப்பின் மூலமாக வெளிக்கொணரப் பட்டுள்ளது. இவ் அமைப்பு 'பெண்' என்ற சஞ்சிகையையும் வெளியிட்டுக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. ஆணாதிக்கம், பெண்கள் மீதான ஒடுக்கு முறை, எமது சமூகத்தில் பல பரிமாணங்களுடன் புரையோடிப் போய் இருக்கின்றன. பெண்களின் தனித்துவமும், பெண்விடுதலை பற்றிய உணர்வும், பெண்நிலைவாதச் சிந்தனைகளும் மற்றும் தோல்விகள், தனிமைகள், நிச்சயமின்மை, சந்தேகங்கள், மனஉணர்வுகள் போன்றவைகளின் வெளிப்பாடே கனல் கவிதைத் தொகுதியாகும். இந் நான்கு பெண்களின் உறுதியான பெண்விடுதலைக் கருத்துக்களைக் கொண்ட இக் கவிதைகள் இவர்களின் பெண்ஒடுக்கு முறைக்கான சிந்தனையுடன் கூடிய செயற்பாடு என்றே கூறமுடியும்.

சமுதாயத்துள்
நானும் ஒருத்தியாய்,
சம்பிரதாயக் கட்டிலில்
போலிப் போர்வைகளால்
என்னைப் போர்த்துக்
தூங்கிக் கொண்டிருந்தேன்
நெடுங்காலமாக.....

எந்தன்
சிந்தனைகள் சற்று விழித்துக் கொள்ள
சுற்றும் முற்றும் பார்த்தேன்
அடிமை
அது என் நிலையல்ல
இயலாதவர்கள்
பெண்களல்ல
புரிய வைக்க வேண்டும்
ஆமாம்!
அதற்காக எழுந்து வந்தேன்

என்று *"என்னை விட்டுவிடுங்கள்"* கவிதையில் பெண்கள் தங்கள் ஒடுக்குமுறைகளுக்கு எதிராக இன்று விழித்தெழத் தொடங்கியுள்ளனர் என்பதை கூறும் சுதாகரி போன்றோரது கவிதைகள் சிலவும் இத் தொகுதியில் அடக்கம்.

எத்தனை காலந்தான்
இழுபட்ட போலி வாழ்வு
வறட்டுத் தனங்களும்
சுயநலப்போக்குகளும்
வக்கிர எண்ணங்களும்
சூழ்ந்து கொண்ட
கொடுமை வாழ்வு

தளைகளை அறுத்தெறிந்து
சுதந்திரமாய்
நானொருவள் என
வாழ்ந்துகாட்ட முயற்சிக்கிறேன்.

என்று இன்னொரு கவிதையில் சுதாகரி துணிச்சலுடன் விளிக்கிறார்.

என் வாழ்வில்
போராட்டம்
ஆரம்பித்துவிட்டது.
எனது நண்பிகள் கூட
என் கருத்தை கேட்கிறார்கள் இல்லை
இவர்கள் மனிதர்களா?
நடைப்பிணங்களா?
இவர்கள்
உணர்வுடன் வாழ்கிறார்களா?
இல்லை
சொந்தமாக சிந்திக்க முடியாதவர்களா?
சமூக வரம்புகளை
இன்னுமா தொடர வேண்டும்?

மாறுதல்களை விரும்பவில்லை?
அடைபட்டு வாழ்ந்த
இந்த வாழ்வில்
நீங்கள் சாதித்தவைதான் என்ன?
இவர்களைப் பார்த்து
ஓவென அழவேண்டும் போல் தோன்றுகிறது.
ஆனாலும்,
எனது
இருப்போ குழம்பவில்லை.

சமூகத்தில் பெண்களின் அடிமைத்தனத்திற்கெதிராக பெண்ணே விழித்தெழு என்று தோளைப் பிடித்து உலுக்கும் ஜெயந்தியின் மனக்குமுறல்கள் இக் கவிதையில் வெளிப்படுகின்றன. சுதாகினி, விஜயலட்சுமி போன்றோரின் கவிதைகளும் இத் தொகுதியில் இன்னொரு பரிமாணத்தில் இடம்பெற்றிருக்கின்றது. மேலும் தமது சிந்தனைகளையும் வாழ்வியல் அர்த்தங்களையும் முடமாக்கிக் கொண்டு வாழ்கின்ற பெரும்பகுதி பெண்களுடன் இக் கவிதைகள் பேசுகின்றன. 1995ம் ஆண்டு வெளிவந்த ஈழத்துப் பெண் கவிஞர்களில் ஒருவரான சுல்பிகாவின் ''விலங்கிடப்பட்ட மானுடம்' என்ற கவிதைத் தொகுதியை இங்கு நினைவுகூர வேண்டியுள்ளது.

ஆயினும் கனல் கவிதைத் தொகுதியில் இடம்பெற்ற அனைத்துக் கவிதைகளும் தரமானவை என்றோ கவிதைக்குரிய பண்புகளுடன் கூடியவை என்றோ கூறிவிட முடியாது என்றவாறான விமர்சனங்களும் எழுகின்றன. என்றாலும் ஒரே தொனியுடன் கூடிநின்று பெண்விடுதலைக் குரலாக கனல் ஒலிக்கின்றது என்பதை மறுப்பதற்கில்லை.

மார்க்சியம் - பெண்ணியம் உறவும் முரணும்



பெண்ணியம் பற்றிய பலவிதமான கருத்துக்களை வெவ்வேறு பார்வைகளில் -கறுப்பு பெண்ணியம், வெள்ளையினப் பெண்ணியம், தலித் பெண்ணியம் என்று பல்வேறு விதமாக- விளக்கங்களை இந் நூல் தருகிறது. பெண் ஓரினப் புணர்ச்சியாளர்களின் மீதான ஒடுக்குமுறை பற்றியும் ஆணாதிக்க முறைமைக்கும் எதிர்ப்பாலுறவுக்கும் இடையிலான தொடர்புகள் பற்றியுமான புரிதல் போன்றவைகளும் சமூக நிகழ்வுகளின் முரண்பாடுகள் பற்றியும் கூறும் இந் நூல் ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. 'மார்க்சியம்-பெண்ணியம் உறவும் முரணும்' என்ற பெயரில் விடியல் பதிப்பகம் இதை வெளியிட்டுள்ளது. பெண்களின் பிரச்சினைகள், உரிமைகள் என்பது கெய்டிகார்ட்மென் அவர்கள் 'மார்க்சியத்திற்கும் பெண்ணியத்திற்கும் இடையே ஒரு மகிழ்ச்சியற்ற திருமணம்- மிக முற்போக்கான கூட்டிணைவை நோக்கி' என்ற தலைப்பில் வெளிவந்த கட்டுரைக்கு எதிர்வினையாக வந்த 12 கட்டுரைகளையும் 'மார்க்சியத்திற்கும் பெண்ணியத்திற்கும் இடையே மகிழ்ச்சியற்ற திருமணம்' என்ற தலைப்பில் லிதியா சர்ஜ்செண்ட வெளியிட்டிருந்தார். இதிலிருந்த 6 கட்டுரைகள் இத் தொகுப்பில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன என பதிப்புரையில் சொல்லப்பட்டிருக்கிறது. கிட்டதட்ட 238 பக்கங்களை கொண்ட இப் புத்தகத்தில் நிறைய பெண்ணிய கருத்துக்கள் உட்கொணரப்பட்டுள்ளன.

இக் கட்டுரையின் முதற் பகுதி பெண்கள் பிரச்சினை குறித்த பல்வேறு மார்க்சிய அணுகுமுறைகளை பரிசீலிக்கிறது. பெண்ணியம் பற்றிய விவாதங்களில் மார்க்சியர்கள் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் மார்க்சியத்தின் உட்பிரிவாக பெண்ணியத்தை வரையறுக்க முயல்கின்றனர். இதுகுறித்து மார்க்சியர்களுக்கும் பெண்ணிலைவாதிகளுக்கும் இடையில் நடந்த முக்கியமான விவாதங்களே இந் நூலில் அடங்கியுள்ளன என்று இதை தமிழில் மொழிபெயர்த்தவர்களான வெ.கோவிந்த சாமி, நடராஜ் இருவரும் கூறுகிறார்கள். இவர்களின் பணி உண்மையிலேயே பாராட்டத்தக்கது. இன்று பலருக்கு மொழிப் பிரச்சினை காரணமாக வேற்று மொழிகளில் வரும் புதிய கருத்துக்களை அறிந்து கொள்ள வாய்ப்புக்களைக் கொடுக்கும் மொழிபெயர்ப்பாளர்களை நாம் பாராட்டுவதில் தப்பில்லை.

- றஞ்சி (சுவிஸ்)

அழுகின்றேன்

நளாயினி தாமரைச்செல்வன்

கற்புள்ள பெண்ணவள்
உன்னதம் உரை என்று
பாவம் மடந்தையவள்
மடமையை எண்ணி நானும்
இங்கு அழுகின்றேன்!

கல்வி அதை மறுத்ததால்
எம்மினம் கற்களாய்
ஜடமாய் இருந்த போதும்
நூலதைப் படித்தும் என்ன பயன்
சரித்திரத்தைப் படியாது
நிதர்சனத்தை படியுங்கள்!

மீண்டும் ஆணவத்தை முறுக்கேற்றும்
ஆண் இனத்திற்கு அடிமைகளாய் -ஏன்
புதுமையாய்ச் சிந்தியுங்கள்
புதுமையை நாடுங்கள்
கற்புக்கு கண்ணகி சான்றன்று
ஒவ்வொரு பெண்ணுமே சான்று என்று
உரையுங்கள்
உங்கள் மடமையை எண்ணி
நான் இங்கு அழுகின்றேன். ●

சுவிஸ் நாட்டு முதல் பெண் தலைவி

சுவிஸ் பாராளுமன்றம் தனது நாட்டின் 150 வருடத்தில் முதல் பெண் தலைவியை தெரிவு செய்துள்ளனர். சுவிஸ் பாராளுமன்ற அமைச்சரவையில் ஏழு அங்கத்தவர் களைக் கொண்ட அமைச்சரவை இயங்கி வருகின்றது. தொடர்ந்து ஏழு அமைச்சர்களும் ஆண்களாகவே இருந்து வந்துள்ளனர். ஆனால் 1980 களின் ஆரம்பத்தில் சூரிச் கன்ரோனைச் (மாவட்டத்தில்) சேர்ந்த எலிசபெத் கொப் (Elisabeth Kop) பராளுமன்றத்தில் முதல் பெண் அமைச்சரானார். இவர் பொலிஸ் - நீதித்துறைக்கு பொறுப்பான பதவியை தனது அமைச்சர் பதவியில் வகித்து வந்தார். ஆனால் இவரின் பதவியைப் பாவித்து இவரது கணவர் வர்த்தகத் தொழில் ரீதியில் கறுப்புப் பணத்தை மாற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டார். இந் நடவடிக்கைக்கு இவரது அமைச்சை கணவர் பயன்படுத்தியதால் இவர் பதவி விலக வேண்டிய

Ruth Dreifuss (இடம்)
Christiane Brunner (வலம்)

கட்டாயம் ஏற்பட்டது. இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஆணாதிக்கவாதிகள் தங்களது நிலைப்பாட்டை நியாயப்படுத்திக் கொண்டனர். பெண்கள் இரகசியம் பேணமாட்டார்கள்; சுயாதீனமாக செயல்பட மாட்டார்கள்; ஆளுமை அற்றவர்கள் என்று வழமையாக ஆண்கள் வாந்தியெடுப்பது சர்வசாதாரணமான போதிலும், இவரது விலகல் இவ்வளவு காலமும் பாராளுமன்றத்தில் இருந்து வந்த ஆண் அங்கத்துவத்தை நிலைநிறுத்த பெரிதும் உதவியது.

இத்தகைய சூழலில் சுகவீனம் காரணமாக தனது கட்சியில் இருந்து பதவி விலகும் சமூக ஜனநாயகக் கட்சி உறுப்பினர் தனது பதவிக்கு (SPD) பெண் உறுப்பினரான Cristine Brunner ஐ பாராளுமன்ற அமைச்சரவைக்கு நிறுத்தியது.

இவர் ஒரு தீவிரப் பெண்ணிலைவாதி. அத்துடன் ஆளுமை மிக்கவர்; தீவிர செயற்பாட்டு தன்மை கொண்டவர். இவரின் பாராளுமன்ற வருகை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அச்சத்தைக் கொடுத்தது. இவரது தெரிவை நிராகரித்து இவருக்குப் பதிலாக இவரது கட்சியில் இருந்த ஆண் உறுப்பினரை (Francis Mathey) பாராளுமன்றத் திலுள்ள மற்றைய கட்சிகள் தெரிவுசெய்தது. இதனால் சமூக ஜனநாயகக் கட்சி Francis Mathy இன் தெரிவை மீளப்பெற்று, Cristina Brunner க்குப் பதிலாக Ruth Dreifuss என்ற பெண் உறுப்பினரை அமைச்சரவைக்கு நிறுத்தியது. பாராளுமன்ற அங்கத்தவராகவும் அமைச்சரவை உறுப்பினராகவும் Ruth Dreifuss தெரிவு செய்யப்பட்டார். இத் தெரிவு நடைபெற்ற பொழுது பெண் உறுப்பினர் தெரிவை எதிர்த்து Auto Partei என்ற கட்சி வெளிநடப்புச் செய்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

தற்போது Ruth Dreifuss உள்நாட்டு அமைச்சர் பதவியிலிருந்து சுவிஸ் நாட்டின் தலைவியாகவும், 150 வருட காலத்தில் சுவிஸ் நாட்டின் பராளுமன்ற ஆட்சியில் முதலாவது பெண்ணாகவும், அங்கம் வகிக்கும் இவர் பெண்களின் உரிமை போராட்டங்கள் பலவற்றில் பங்கு கொண்டதுடன், பெண்கள் அமைப்புகளிலும் செயற்பட்டவர் ஆவர். தனது பதவி ஏற்பு வைபவத்தில் பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டியில் தனது நாட்டின் ஜனநாயகம், நாட்டின் வளம் செழிப்புற பாடுபடப் போவதாகவும், பெண் உறுப்பினர்களின் விகிதாசாரத்தை பாராளுமன்றத்தில் கூட்ட தன்னாலான முயற்சிகளை செய்யப் போவதாகவும் கூறினார். அத்துடன் தனது பாராளுமன்றத் தெரிவுக்கு பெண்கள் நடத்திய போராட்டத்தின் விளைவின் பயனே இன்று தான் சுவிஸ் நாட்டின் தலைவியாக வந்ததற்கு காரணம் என்றார்.

- நந்தினி (சுவிஸ்)

படம் - நன்றி:Zürichsee-Zeitungen

கனல்

வெளியீடு
Suriya Womens Developement Centre
27A Lady Manning Drive
Batticaloa

மார்க்சியம்-பெண்ணியம் உறவும் முரணும்

Vidiyal Pathippagam
3.Mariamman Kovil St.
Uppilipalayam
Coimbatore - 15

கவிதை

இன்றிரவு
இறங்கு துறையில்
நடனவிருந்து.
பலர் வீதியில்
நடந்து
கொண்டிருக்கின்றனர்.
பத்தொன்பது நிரம்பிய
பெண்
அவளுடைய
தோள்கள்
புத்தகத்தை நோக்கி
குவிகின்றன.
அழகைப்பெறாதவர்கள்
அறிஞர்களாகிக்
கொண்டிருக்கின்றனர்.

எல்லா
வயதானவர்களும்
கூறுகின்றனர்
உனக்கு தேவை
அமைதியெனில்
புத்தகங்களை தேடு.
புத்தகவரிகளிடையே
சந்திரக்கதிர்கள்
மின்னுகின்றன.

தன்னையறியாமல்
திருப்பப்படுகின்றது
புத்தகத்தின் ஒற்றைகள்
வெண்மதி
இதயத்தை பிழிகிறது
இன்றிரவு
அவன் யாருடன்
நடனமாடுவான்
ஏலி அல்லது கத்தரினா
இருவரையும்
விரும்புகின்ற
அவன்

தூக்கத்திற்கான
நேரம் இது
புத்தகத்தை மூடிவிட்டு
கண்விழித்தபடி
கட்டிலில் அவள்
வெளியே
அவர்கள் இப்போ
நடனமாடுவார்கள்.

பல
நாழிகைகள்
கொண்டது இரவு
ஆண்டுகள்
பல
காண்பது
வாழ்க்கை.

தமிழில்:- தயாநிதி (நோர்வே)

நோர்வேஜிய மொழி மூலம்-Lille Anna ,Inger Hagerup

ஜெயந்தியுடன்

தொலைபேசி

உரையாடல்

ஜெர்மனியிலுள்ள பெண்கள் அமைப்பு ஒன்றின் அழைப்பின் பேரில் கருத்தரங்கு ஒன்றுக்கு கடந்த வருடம் (செப்ரம்பர் 1998) இலங்கையிலிருந்து சூர்யா பெண்கள் அமைப்பின் சார்பில் கலந்து கொள்ள வருகை தந்த ஜெயந்தி தளையசிங்கத்துடன் நாம் தொலைபேசியின் வாயிலாக கலந்து உரையாடினோம். அவருடன் பல கருத்துக்களையும் பரிமாறிக் கொண்டோம். அந்த அடிப்படையில் அவற்றை சக்தியின் ஊடாக வாசகர்களுடன் பகிர்ந்துகொள்வதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

தொகுப்பு: றஞ்சி (சுவிஸ்), தயாநிதி (நோர்வே)

உங்கள் அமைப்புப் பற்றி, பணிகள் பற்றி கூறமுடியுமா? அமைப்புக்கான பொருளாதாரத் தேவைகளை எவ்வாறு பெற்றுக் கொள்கிறீர்கள்?

மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறுபட்ட பிரச்சனைகளுக்குள் வாழும் பெண்களின் திறமைகளை வெளிக்கொணரவும், அவர்கள் தமது சூழல், சமூகம் தமது நிலை பற்றிய புரிந்துணர்வு கொண்டவர்களாகவும், பொருளாதாரம் சார்ந்து வலுவுள்ளவர்களாக உருவாகவும் பெண்கள் தமக்குள் குழுவாக இணைந்து செயற்படுவதன் மூலம் ஆக்கபூர்வமான பயிற்சிப் பட்டறைகளையும் செயற்திட்டங்களையும், சட்ட ஆலோசனைகளையும் வழங்குவதுடன், ஏனைய பெண்கள் அமைப்புகளுடனான தொடர்பு நடவடிக்கைகளிலும் சூர்யா பெண்கள் அமைப்பு ஈடுபட்டு வருகின்றது. பொருளாதாரத் தேவைகள் என்னும் போது எமது அமைப்புக்கு நெதர்லாந்தில் இருக்கும் ஒரு அமைப்பே உதவி செய்து வருகின்றது. இதனால் பொருளாதார பிரச்சினையை எம்மால் சமாளிக்கக் கூடியதாக இருக்கின்றது.

நாட்டில் தற்போதுள்ள நிலைமையில் பெண்கள் தமது உரிமைகள் பற்றி உணர வாய்ப்பு ஏற்படுகிறதா?

நிச்சயமாக பெண்கள் இப்பொழுது விழிப்புறத் தொடங்கியுள்ளனர். எழுத்துத் திறமை, கல்வி, கவிதை எழுதுதல், நாடகங்கள் போன்றவற்றினால் இன்று பல

பெண்கள் தங்கள் உரிமைகள் சம்பந்தமான செயலில் முன்னேறத் தொடங்கியுள்ளதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. பயிற்சிப் பட்டறைகளில் கலந்து கொண்ட பெண்களில் 50 வீதமானவர்கள் பெண்கள் பிரச்சினையை உணர்ந்து கொண்டவர்களாக உள்ளனர். அவர்கள் மூலமான படைப்புக்கள், அவற்றில் 4 பெண்களின் கவிதைகளை கவிதா நிகழ்வுகள் என்ற உருவிற்குள் கொண்டு வந்து இக் கவிதா நிகழ்வினை 6 தடவைகள் மேடையேற்றினோம். 4 தடவைகள் மட்டுநகரிலும் 2 தடவைகள் கொழும்பிலும் மேடையேற்றப்பட்டது.

பெண்களுக்கு ஆக்க இலக்கியம் பற்றிய பயிற்சி வகுப்புக்களை நடாத்தி வருகிறோம். எழுதும் திறன், ஓவியம் போன்றவைகளை ஊக்குவிக்குமுகமாக இவ் வகுப்பு நடாத்தப்பட்டடது. இதில் கலந்து கொண்ட பல பெண்கள் கட்டுரைகள், கதைகள், கவிதைகள், ஓவியம் போன்றவற்றை பெண் சஞ்சிகைக்கு தந்துள்ளனர் அவை பிரசுரிக்கப்பட்டுள்ளன. எழுத்துத் திறன் மெல்ல மெல்ல மட்டுநகரில் உருப்பெற்று வருகிறது.

தேசியவிடுதலைப் போராட்ட காலத்தில் பெண்களின் உரிமைப் போராட்டத்தை முன்னெடுக்க முற்படும் வேளையில் எவ்வாறான பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்?

பெண்களின் உரிமைகளுக்காகப் போராடும் பொழுது நிச்சயமாக பல பிரச்சினைகளை எந்த அமைப்போ அல்லது தனிப்பட்டவர்களோ மேற்கொள்ளும் போது சமூகத்தாலோ அல்லது அதை விரும்பாதவர்களினாலோ பல இடையூறுகள் இருக்கத்தான் செய்யும். அதுவும் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் இப்படியான செயற்பாடுகள் எமது செயற்பாட்டிற்கு கஸ்ட நிலைகளை தோற்றுவிக்கத்தான் செய்யும். அவற்றை நாம் சமாளித்து பெண்களுக்கான வேலைத்திட்டங்களில் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றோம். உதாரணத்திற்கு தமிழ்ப் பெண்கள் மீது நடாத்தப்படும் பாலியல் வன்முறையை நிறுத்தக் கோரியும் இலங்கை இராணுவம் வடக்கிலும் கிழக்குப் பகுதியிலும் தமிழ்ப் பெண்களை பலாத்காரம் செய்து வருவதையும், பல அப்பாவிப் பெண்கள் கடத்திச் செல்லப் படுவதையும் கண்டித்தும் நாம் ஜனாதிபதிக்கு கடிதம் மூலம் எமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளோம்.

நீங்கள் அங்கம் வகிக்கும் அமைப்பில் முஸ்லீம், மற்றும் மலையக, சிங்களப் பெண்கள் அங்கம் வகிக்கிறார்களா?

நாங்கள் பெண்களுக்கான பிரச்சினைகளை முன்னெடுத்து செயற்படுபவர்கள். இங்கு எந்த வேறுபாடும் இல்லாமல் செயற்பட்டு வருகின்றோம். எங்களது சூர்யா அமைப்பில் முஸ்லிம், சிங்கள, தமிழ்ப் (மலையகம் உட்பட) பெண்கள் ஆலோசனைக் குழுவிலும் அலுவலர்கள் குழுவிலும் அங்கம் வகிப்பதை நீங்கள் 'பெண்' சஞ்சிகை மூலம் அறிந்து கொள்ளலாம்.

புலம் பெயர்ந்து வாழும் நாம் குறிப்பாக பெண்கள் எவ்வகையான உதவிகளை அங்கு வாழும் பெண்களுக்கு வழங்கலாம் என எதிர்பார்க்கிறீர்கள்?

இன்று போராட்டச் சூழலில் பாதிக்கப்பட்டு கணவன்மாரை இழந்த பெண்கள் விதவைகளாக இருக்கிறார்கள். பெண்களின் மனித உரிமைகள் மீறப்படுகின்றன. எத்தனையோ குழந்தைகள் தாய் தகப்பனை இழந்து அநாதரவாக இருக்கிறார்கள். எத்தனையோ பெண்கள் நிதிப் பிரச்சினையால் தங்களது படிப்பைத் தொடர (பட்ட்ப் படிப்பை) முடியாமல் இருக்கிறார்கள். இன்னும் பலர் ஒரு நேர சாப்பாட்டுக்கே கஸ்டப்படுபவர்களாகவும் தொழில் வாய்ப்பு அற்றவர்களாகவும் இருக்கிறார்கள். இப்படியானவர்களுக்கு நீங்கள் உதவி செய்ய முன்வரலாம் என்றுதான் எனக்குத் தோன்றுகின்றது.

பெண்கள் அமைப்பாவதன் மூலம் தான் உரிமைகளை வென்றெடுக்க முடியும் என்பதில் நீங்கள் எந்தளவில் உடன்படுகின்றீர்கள்?

நிச்சயமாக பெண்களுக்கிடையில் கருத்து முரண்பாடு இருந்தாலும் பெண்கள் ஒரு அமைப்பாவதன் மூலம் தான் அதற்கு வலிமை இருக்கிறது எனபது என் கருத்து. பெண்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக பெண்கள் அனைவரும் ஒன்றுபடுவதன் மூலம் அதற்கான செயற்பாடுகள் மேலோங்கிச் சென்றால் தான் பெண்களின் உரிமைகளை வென்றெடுக்க முடியும். அதேபோல் எமது சூர்யா அமைப்பின் மூலம் நாம் எவ்வளவோ செயற்பாடுகளை பெண்கள் மத்தியில் செயற்படுத்தி வருகின்றோம் என்பதை நடைமுறையில் நீங்கள் காணலாம்.

தேசிய விடுதலைப் போராட்டத்திற்கான அரசியல் தீர்வு பற்றி முரண்பாடுடைய, ஆனால் பெண்களின் உரிமை பற்றி அக்கறையுடைய பெண்கள் அமைப்பில் இணைந்து செயற்படுவது பற்றி உங்கள் கருத்து என்ன?

நான் ஏற்கனவே கூறியிருந்தது போல் இங்கும் கூற விரும்புகிறேன். கருத்து முரண்பாடுகள் இருக்கத்தான் செய்யும். அதேவேளையில் ஒவ்வொரு மனிதருக்கும் கருத்துச் சுதந்திரம் இருக்கிறது அதை நாம் அங்கீகரித்தே ஆகவேண்டும். பெண்களின் உரிமைகளுக்காகவும் இந்த ஆணாதிக்க சமூகத்திற்கெதிராகவும் நாம் போராடிக் கொண்டிருக்கின்றோம் என்பதை நாம் கவனத்தில் எடுத்தால் நல்லது என்பதே என் கருத்து.

இலங்கையில் எத்தனை தமிழ்பேசும் பெண்கள் அமைப்புக்கள் இருக்கின்றன?

இலங்கையில் எனக்குத் தெரிந்தளவில் பெண்கள், அதுவும் தமிழ்பேசும் பெண்கள், அமைப்பு மட்டுநகரில் 7 அமைப்புக்களும் அக்கரைப்பற்றில் 4 அமைப்புக்களும் திருமலையில் ஒன்றும் உள்ளது. இவை யாவற்றையும் உள்ளடக்கி கிழக்குப் பிராந்திய பெண்கள் கூட்டமைப்பு என்ற அமைப்பை உருவாக்கியுள்ளோம்.

1996 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட இந்த அமைப்பு இப்போதும் தவழும் நிலையிலேயே உள்ளது. நாம் பெண்கள் தினத்தையொட்டி போஸ்டர் வெளியிடுதல், பாலியல் பலாத்காரத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கைகளில் ஈடுபடல், இது சம்பந்தமாக ஜனாதிபதிக்கு ஆட்சேபக் கடிதங்கள் எழுதுதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோம். ஆரம்பத்தில் பல இடர்களைச் சந்தித்த போதிலும் எதிர்காலத்தில் மேலும் பயனுள்ள செயற்பாடுகளில் ஈடுபடுவோம் என நம்புகிறோம்.

அத்துடன் நான்கு ஆய்வுகளை நாம் மேற்கொண்டிருந்தோம்.

- பெண்களும் இடம்பெயர்வும்
- வன்முறை பற்றி
- கல்வி நிலைமை
- குடும்பத் தலைவர்களை இழந்த பெண்களின் வாழ்க்கை நிலை

இவைகள் இதுவரை வெளியிடப் படவில்லை. ஏனெனில் ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்த பின்பு வெளியிட உத்தேசித்துள்ளோம்.

உங்களது ஜேர்மனியப் பயணத்தில் குறிப்பாக தமிழ்ப் பெண்களை நீங்கள் சந்தித்து உரையாடியதன் மூலம் அவர்கள் சம்பந்தமாக என்ன கூறவிரும்புகிறீர்கள்?

கூடுதலாக நான் ஜேர்மனியிலுள்ள பெண்களைத் தான் சந்தித்தேன். தொலைபேசி வாயிலாக நோர்வே, சுவிஸ் போன்ற நாடுகளிலுள்ள பெண்களுடனும் நான் உரையாடினேன். இவர்கள் எல்லோரும் ஆணாதிக்கத்திற்கு எதிராக பல கருத்துக்களை என்னுடன் பகிர்ந்து கொண்டார்கள். அத்துடன் பாலியல் சம்பந்தமான பல விடயங்களை வெளிப்படையாகவே கதைத்தார்கள். இவைகள் மிகவும் வரவேற்கத்தக்கது. மிகவும் சுதந்திரமாக தங்களது கருத்துக்களை பகிர்ந்து கொண்டார்கள். தாய்நாட்டில் பெண்களுக்கு எதிராக நடக்கும் வன்முறைகளை கண்டித்தும், அவர்களுக்கு தங்களால் ஆன உதவிகளை செய்ய அவர்கள் முன்வருவதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். மேலும் எல்லாத் தோழிகளும் ஏதோ ஒரு வகையில் பெண்ணியம் சம்பந்தமாக ஒரு சில புதிய கருத்துக்களை என்னுடன் பகிர்ந்து கொண்டார்கள்.

ஆனால் ஒரு குறைபாடு. புலம்பெயர் நாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கும் பெண்கள் அனைவரும் ஒன்றுபட்டு தங்களுக்குள் ஒரு அமைப்பை கட்டலாம். உதாரணமாக எங்களது சூர்யா பெண்கள் அமைப்பைப் போல். மேலும் வேற்று மொழிகளில் இருந்து பல பெண்ணியம் சம்பந்தமானவற்றை மொழிபெயர்த்து அவற்றை புத்தகமாகவும் வெளியிடலாம். இதனால் பலர் நன்மையடைவர் என்று தான் தோன்றுகின்றது.

,சக்தி, சம்பந்தமாக உங்கள் கருத்து?

இங்கு கூடுதலான வேலைப்பளுவினூடும் சக்தியை வெளியிடுவதையிட்டு மிகவும் சந்தோசமடைகின்றேன். அதுவும் புலம்பெயர் நாடுகளில் இப்படியான சஞ்சிகைகள் மூலம் வாசிப்புத் திறனையும் எழுத்துத் திறனையும் பெண்களிடையே வளர்க்க இச் சஞ்சிகை மூலம் தோழிகள் ஏற்படுத்துவார்கள் என்ற நம்பிக்கையுடன்... சக்தி வளர எனது வாழ்த்துக்கள்.

சிவரமணியின்
நினைவை ஒட்டிய
கவிதை

உன் இருப்பே உண்மை

பாமதி
அவுஸ்ரேலியா

அதோ எங்கும் நீ நிற்கின்றாய்
சாலை ஓரங்களில்
வேலியோடு சாய்ந்து நின்று
அசதியாய் பூக்கும் பூக்களில்.
படபட என்று காகிதத்தை காவி
சுழன்றடிக்கும் மாலை நேரக் காற்றில்...

குட்டி மதில் சுவர்களில் ஏறி இருந்து
கடலை கொறிக்கின்றாய்
காய்ந்து கிடக்கும் மாவிலையில்
தெளிவாய் தெரியும் கோடுகளில்....

பாசி படிந்த கிணற்றுக் கட்டின் வழுவழுப்பில்....
கைபிடித்து நடக்கும் சிறுமியின் வேகத்தில்
பிரிந்து போகாமல் நீ
பிரிக்க முடியாதபடி நீ
என் தேசத்து காற்றாய் முதுகில் தட்டி
வானவில்லாய் சிரிக்கின்றாய்...

மண்ணில் விதைக்கப்பட வில்லை
என்னில் என்னைப் போன்ற
பல ஆத்மாக்களில் விதைக்கப்பட்டாய்
மரணம் எங்கேயடி உனக்குள் நிகழ்ந்தது
உன் இருப்பே உண்மை
உன் இருப்பே உண்மை...

மார்ச் 8 சர்வதேசப் பெண்கள் தினம்

பலருக்கு வருடத்தில் இதுவொரு தினம். உலகெங்கிலும் அடிமை விலங்கைச் சுமந்திருக்கும் அனைத்துப் பெண்களுக்கும் இத்தினம் ஒரு அர்த்தம் கொண்ட தினமாகவும் நம்பிக்கையைக் கொடுக்கும் தினமாகவும் நிறைந்தது. 1910 ஆம் ஆண்டில் அமெரிக்காவில் முதலாளித்துவ வாக்குரிமை முறையை எதிர்த்து பெண் தொழிலாளர்களால் நடாத்தப்பட்ட வேலைநிறுத்தப் போராட்டமானது ஏனைய பெண்களினது ஆதரவை தன்னகத்தே கொண்ட பெண்களின் உரிமைப் போராட்டமாக பரிணமித்தது. இதே வருடம் டென்மார்க் கோப்பன்காகனில் கிளாரா செக்கினால் மார்ச் 8 சர்வதேசப் பெண்கள் தினமாக பிரகடனப்படுத்தபட்டது.

1975 இல் அயர்லாந்தில் பெண்கள் பொது வேலைநிறுத்தம் செய்தார்கள். 1991 இல் சுவிஸில் 10000 தொழிற்சங்கப் பெண்கள் ஊதியக்குறைவுக்கு எதிராக வேலைநிறுத்தப் போராட்டத்தை நடத்தியதன் விளைவாக அவர்களுக்கு வெற்றி கிடைத்தது. 1981இல் வாக்குரிமைப் போராட்டம் செய்ததினால் சட்டத்தையே மாற்றியமைக்கச் செய்தனர். பெண் விரும்பினால் எல்லாம் ஸ்தம்பிதம் அடையும் என்ற கோஷத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வேலைநிறுத்த போராட்டத்தில் கிட்டதட்ட 500000 பெண்கள் கலந்து கொண்டனர். இதனால் வெற்றியடைந்தனர். சுவிஸ் பாராளுமன்றத்தில் முதன் முதலாக பெண்ணொருத்தி தேர்ந்தெடுக்கப்பட்டாள்.

பெண்களுக்கு சகல துறைகளிலும் சம அந்தஸ்து தரப்பட்டிருக்கிறது என்றும் குடும்பத்தில் பெண்கள் மிகவும் மகிழ்ச்சியாகத்தான் இருக்கின்றார்கள் என்றும் கூறும் ஆண்கள் பலர். வாக்குரிமை, சமஉரிமை என்பவற்றுக்காகவும், ஊதியக்குறைவு, மூன்றாம் உலக நாடுகளிலிருந்து பெண்களை திருமணத்திற்காக இறக்குமதி செய்தல், விபச்சாரங்களில் ஈடுபடுத்தல், வன்முறைகளும் நிர்வாணக் காட்சிகளும் தொலைக் காட்சிகளில் அதிகரித்து வருதல், போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நாடுகளில் பெண்கள் பாலியல் வன்முறைக்குட்படல், சிறுவர்களை பாலியலில் ஈடுபடுத்தல் போன்றவற்றுக்கு எதிராகவும் கோரிக்கைகளை மார்ச் 8இல் பெண்கள் தங்களது கோசங்களாக முன்வைக்கின்றனர். காலங்காலமாக பெண்களின் உரிமைகள் மறுக்கப் பட்டு வருகின்றபோதிலும் பெண்கள் மார்ச் 8இல் தங்களது குரலை ஓங்கச் செய்து ஆணாதிக்கக் கருத்தியலில் மூழ்கியிருப்பவர்களை தட்டி எழுப்புவதே நோக்கமாகும். வாழ்க்கைக்காய்ப் போராடும் மனித இனத்தில் வாழ்க்கையோடு போராடும் பெண் இனத்திற்காய் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 8ம் திகதியை உலகப் பெண்கள் தினமாக, பெண்கள் அமைப்புக்கள் கொண்டாடி வருகின்றன.

(நன்றி : பெண்கள் சந்திப்பு மலர் 1995)

வணக்கம்!

பெப்ரவரி 12ம் தேதி, பரீஸில் சிறுமி நிதர்சினி சிதைக்கப்பட்டாள். கொலைசெய்யப்பட்டாள். வெறியர்கள் இரு ஆண்கள்தான் (தமிழர்கள்). ஆணாதிக்கக் கருத்தியலை வரித்துள்ள இந்த ஆண் உலகு இதற்கு தார்மீகப் பொறுப்பேற்க வேண்டியே உள்ளது. அதேபோல் வன்முறையை தமது கலையாக வளர்த்தெடுத்த சகல இயக்கங்களும் இந்த வகை கொலைக் கலாச்சாரத்திற்கு வழிகோலியவர்கள்தான் என்பதும் வேதனையோடு புரிந்துகொள்ளப்பட வேண்டிய ஒன்று. யுத்தமோ பழிவாங்கல்களோ உள்வியல் ரீதியிலான அதிர்ச்சி வைத்தியமோ பாலியல் வெறியாட்டமோ எதுவானாலும் அதற்கு பெரும்பாலும் தேர்ந்தெடுக்கப்படுவது பெண்கள்தான். அதுவும் 11 வயது சிறுமி மீதே இந்தவகை வன்முறை பாய்ந்திருப்பது புலம்பெயர் தமிழர்களை மட்டுமல்ல இந் நாட்டு மக்களையே அதிர்ச்சிக்கு உள்ளாக்கி யுள்ளது. மனித நாகரீகமே வெட்கித் தலைகுனிந்து நிற்கிறது. இதன் விளைநிலம் எமது சமூகம்தான். அதை நாம் கேள்வி கேட்க வேண்டியிருக்கிறது. ஆணாதிக்கக் கருத்தியலை தகர்க்க வேண்டியிருக்கிறது. இந்தவகை கொடுமைகளுக்கெதிராக ஓங்கி குரல்கொடுக்க வேண்டியிருக்கிறது.

இலகுவில் மீளமுடியாத துயருள் வீழ்த்தப்பட்டிருக்கும் நிதர்சினியின் குடும்பத்தாரின் வேதனையில் சக்தி பங்குகொள்கிறாள்.

மீண்டும் உங்கள் கரங்களில் சக்தி! எமது முக்கிய நோக்கமே பெண்களின் எழுத்திறமையையும் வாசிப்புத் திறமையையும் ஊக்குவிப்பதே. இதைக் கவனத்தில் எடுத்து பல பெண்களுடன் தொடர்பு கொண்ட போது அவர்கள் வைக்கும் காரணங்கள் கூடுதலாக வேலைப்பிரச்சினையாக இருந்தாலும் ஒரு சில பெண்கள் இப்படியான சிறு பத்திரிகைகளுக்கு எழுதுவதில் தங்களுக்கு உடன்பாடு இல்லையெனவும், தங்களது கடந்த பத்துவருட அரசியல்(!) வாழ்க்கையில் தாங்கள் அனுபவித்துக்கொண்ட சிக்கல்களையும் பிரச்சினைகளையும் காரணம் காட்டியும், ஒரு சிலர் நேரமில்லை மூட் இல்லை இந்த பத்திரிகை வந்துதான் என்னத்தை பெண்களிடையே செய்கிறது என்ற மனச்சோர்வுடன் இருப்பதையும் எம்மால் அவதானிக்க முடிந்தது.

இன்று புலம்பெயர் நாடுகளில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் எவ்வளவோ, ஏன் மனம்விட்டுக் கதைக்கக்கூடிய சூழ்நிலைகூட இன்று தோழிகளிடையே அருகி வருகின்றதை நாம் அவதானிக்கலாம். எம்மை விட எமது தாய்நாட்டில் போராட்டச் சூழல் மற்றும் பணவசதி, தொழிநுட்ப வசதி குறைவு இருந்தும் தங்களால் பெண்களுக்கு செய்யக் கூடியவற்றை பல பெண்கள் செய்துவரும் அதே வேளையில் புலம்பெயர் நாட்டில் பல வசதிகள் இருந்தும் ஊக்கம் குறைந்து இருப்பதும், பெண்களிடையே ஒற்றுமை குன்றியிருப்பது போன்ற காரணங்கள் மிகவும் கவலைதரும் நிகழ்ச்சியாக வும் எம்மை வருத்திக்கொண்டிருக்கின்ற விடயமாகவும் இருக்கின்றது என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.

இந்த ஆண்டும் சில பெண் தோழிகள் சுவிஸிலிருந்து சக்தியுடன் இணைந்து கொள்கிறார்கள் என்பதையிட்டு சக்தி பெருமைகொள்கிறாள்.

உங்களது திறந்த விமர்சனங்களையும் ஆக்கங்களையும் சக்தி எதிர்பார்க்கிறாள்.

ஆர் குழு

பாமதி
அவுஸ்திரேலியா

வலி

கள்ளிச் செடியில் இருந்து
இரத்தம் கசிந்துகொண்டிருந்தது
முட்டைக்குள்
பறவைக் குஞ்சு இறந்தே பிறந்தது
மலர்களின் மகரந்தங்கள்
வண்டுகளாலே சிதைக்கப்பட்டிருந்தது.

சிதறிக்கிடந்த உன் எலும்புகளையும்
சதைத் துண்டுகளையும்
கூட்டி அள்ளி
உன் சிதைக்கு தீ வைத்தேன்

அக்கினியாய் உயர்ந்தாய்
புகைக்காற்றாய் பரவினாய்
மேகங்களுடன் கலந்து
நிரந்தரமாய்ப் பிரிந்தாய்.